இலவச வெளியீடு: யேர்மனி - இங்கிலாந்து-கனடா பங்குனி. March. 2013

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 63 பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A. ஓசை 199

Orientalische Textilien & Schmuck

22 ஆண்டுகளாக நம்பிக்கை! நாணயத்தின்!! இருப்பிடம்.

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

எல்லாச் செய்திகளையும் வெறும் செய்திகளாக்கினால்

## ஊரில் உலகில் நடக்காததா - இன்று இங்கு நடந்துபோச்சு! என்றாகிவிடும்!

## தமிழ்ப் பெண்களின் திருப்தியான முன்னேற்றம்!




பங்குனி 8
பெண்கள் தினம்

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 விபரம் பக்கம் 11

புதியதோர் தொழில் நுட்பம்!
புதியதோர் வாய்ப்பு!!
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 13

Gopara Gnanam
Rheinische Str.81
44137 Dortmund- Germany
Tel: 0231/5450028
Mob: 01713306542
விபரம் பக்கம் 08

உலகத் தமிழர்களின்
உள்ளங்களிலும் , இல்லங்களிலும்
ஐங்கரன்
கலைஞர்
JAYA TV
தொலைபேசி இல. 0044 208 543 43 22
Ayngaran foods
30 High Street Colliers Wood,
Colliers Wood
London, SW19 2JE- U.K
ayngaran.com
AYNGARAN

மொத்த வியாபார நிலையம்!
StaR - Impex
Kipper str.Tor.3- 44147 Dortmund
Tel.: 0231/8602696

S.K.Silks & Gold Paraadise
டோட்முண்ட் நகரில்
மாபெரும் ராஜமுத்திரை
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
15.03.2013 -15.4.2013
30% முதல் 50 % வரை கழிவு விலையில்!
150 யூரோவிற்கு ஒரு சேலை வாங்கினால் ஒரு பிளவுஸ் தைக்க இலவசம்!
ஒரு காக்கிராச்சோலி வாங்கினால் 2 காக்கிராச்சோலி இலவசம்!
ஒரு பஞ்சாபி வாங்கினால் 2 பஞ்சாபி இலவசம்!
சாறி பிளவுஸ் உடன் தைத்து கொடுக்கப்படும்.
என்றும் புதியது அழகின் இரகசியம் அது.
11th ANNIVERSARY
Mr.P.Sritharan, Proprietor
Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647

Jewellers & Silk House
London's Largest Selections
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
Rathy ரதி
28 Ealing Rd
Wembley
HA0 4TL London
Tel: 02089033063
209 upper tooting Road
tooting sw19 7gt
0208682 2233

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




**Tel.: 0201/236925**
**Fax: 0201/236928**

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...**

Ria MONEY TRANSFER
இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

**APIRAAMI ENTERPRISE**
Pferdemarkt 9
45127 ESSEN

# நிம்மதியா குளிக்க முடியவில்லை! உறங்க முடியவில்லை!. என்னய்யா உலகம் இது?

## மினிக் கமறாக்களால் தொல்லை!

மாதங்கி













அன்று கமராக்கள் பெரிய பெட்டிகளாக இருந்தன. பிரச்சினைகள் சிறிதாக இருந்தன. இன்று கமராக்கள் கைமணிக்கூட்டின் பற்றியளவிற்கு சிறிதாக வந்துவிட்டது.

ஆனால், அதனால் சில பிரச்சினைகள் பெரிதாகிவிட்டன.

பெண்களை மறைந்திருந்து பார்த்து இரசித்தது ஒருகாலம் அன்று, படங்களில் கூட "மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன" என்ற ஒரு பாடல் தில்லானா மோகனாம்பாளில் வந்து கலக்கியது.

இன்று மறைந்திருந்து படம்பிடிக்கும் மா்மம் என்ன? அதனை விலைபேசி தொலைபேசி இணையத்தளம் எங்கும் கொடுப்பதற்கே!

இன்று செல்போன்களில் கமரா, பேனாக்களில் கமரா தோள்களில் போடும் பைக்களில் கமரா, இப்படி எங்கும் கமரா! இதனை விட பாதுகாப்புச் சேவையில் கமரா. இந்தப் பாதுகாப்புக்கமராக்கள் கூட சிலசமயங்களில் தம்பணிகளில் தடம்புரண்டு பெண்களை மையப்படுத்தி படம் எடுக்கின்றது. தனிமனித சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலை பல சந்தர்ப்பங்களில் தெரிகிறது.

ஆண்கள் அணிந்திருக்கும் சில ரி.சேட்டில் கமராக்கள் உண்டு. அதேபோல் கைமணிக்கூட்டில், மற்றும் கடைகளில் ஆடைகள் மாற்றிப் பார்க்கும் அறையில் உள்ள கண்ணாடி, மற்றும் உங்கள் உடைகளைக் கொழுவும் கொழுக்கி இவையாவும் சில சமயங்களில் கமராக்களாக இருக்கலாம். இவற்றில் உங்கள் கண்கள் அவதானமாக இருக்க வேண்டும். குடும்பத்துடன் சுற்றுலா சென்றால் கணவன்-மனைவி சுதந்திரமாக இருக்கமுடியுமா? சில துணிக் கடைகளில் பெண்கள், ஆண்கள், துணிமாற்றுவதை கூட படம்பிடிக்கிறார்கள். இது தான் இன்றைய சூழலா?

இவ்வளவு ஏன் சில பெண்கள் தங்கும் விடுதிகள் மற்றும் பேருந்துகளில் (குறிப்பாக இந்தியாவில்) கூட சுதந்திரமும் பாதுகாப்பும், இல்லையே!

நிம்மதியா குளிக்க முடியவில்லை! தூங்க முடியவில்லை!. என்னய்யா உலகம் இது?

கேமராக்கள் மிகவும் துல்லியமான தரத்துடனும் அளவுகளில் சிறியதாகவும் இருப்பது பற்றிய தகவல்கள் உங்களுக்கு தெரியுமா? தெரிந்துகொண்டால் நீங்கள் தனிமையில் இருக்கும்போது கட்டாயமாக ஒற்றை விழி ஒன்று (கமாரா) உங்களை உற்று நோக்குகின்றதா என அவதானியுங்கள்.

விடுதி அறைகளில் முகம்பார்க்கும் கண்ணாடி இருக்கும் அக்கண்ணாடி சில சமயங்களில் மறுபுறத்தில் இருந்து நீங்கள் காணமல் திருட்டுத்தனமாகப் பார்க்கக்கூடியதாக இருக்கலாம். இப்படியான கண்ணாடியை இனங்காண்பது எப்படி. உங்கள் விரலைக் காண்ணாடியில் முட்டினால் கண்ணாடிக்கும் உங்கள் விரலுக்கும், இடையில் ஒரு இடைவெளியிருந்தால் அது நல்ல கண்ணாடி. அப்படி இடைவெளியில்லை என்றால் அது மாயக் கண்ணாடி.

அக்காண்ணாடியின் மறுபுறத்தில் இருந்து உங்களை நன்றாகக் கவனிக்கமுடியும். உங்களை விடியோவும் எடுக்கமுடியும். எனவே இச்சந்தர்ப்பத்தில் ஒரு விரல் சோதனை எவ்வித செலவும் இன்றி உதவும்.

குறிப்பாக விடுமுறை காலங்களில் வேறு நாடுகளில் விடுமுறைக்கு விடுதிகளில் தங்கும்போது கவனம் அதிகமாகவே வேண்டும். அதிநவீன வேவுபார்க்கும் கேமராக்கள் வேகமாக வந்து உங்கள் வாழ்வை திசைமாற்றலாம். புதிய கண்டுபிடிப்புக்கள் யாவும் நன்மை தீமை கலந்ததே! நன்மையைப் பெருக்குவதும் தீமையை அழிப்பதும் எமது கையில்தான் உண்டு.

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்

**T.R.S Traders**



இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**T.R.S Traders**
Königswall-16 **(Am Hbf)**
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்
**Tel.: 0231/160 494**
**Fax: 0231/165 6524**

**பிரான்ஸ் லூட்ஸ் மாதா கோவில் புனிதப் பயணம்**
**March April june july மாதங்களில்**

எம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யேர்மனி Dortmund நகரில் இருந்தும்.Frankfurt நகரில் இருந்தும்,பல தடவைகள் லூட்ஸ் மாதா கோவிலுக்கு பஸ் மூலம் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 190 யூரோ** மட்டுமே! பிரயாணம் செய்ய விரும்புவோர் முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்யவும். நன்றி:



**தொடர்புகள்: K.முருகா : 02972 7754 Handy: 0175 850 14 89**



**Bielefeld நகரில்....**

**Lakshmi Jewellery &Silks**

**Asia super markt**

**3 in one**

பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம் மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்

தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்
Lakshmi Jewellery &Silk

பழைய பவுனுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

பழைய பவுனுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

Wilhelm Str.09
33602 Bielefeld

**Tel:0521 4283 510**


தொலைபேசி: **Ruban 0179 72 35 729**
http://www.lakshmi-jewellerysilks.de



Dortmund நகரில் 14.09.2013 வெற்றிமணி விழா

**வெற்றிமணி**

**தமிழ் எங்கள் உயிருக்கு மேல்**
கவிஞர்.வி.க



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
**கலாநிதி**
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

**Brinker Höhe.13**
**58507 Lüdenscheid**
**Germany**
**Tel: 02351/45 88 62**
**0157 88 77 31 56**

e-mail: vettimaniy@hotmail.com

QB 830

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது
**அரவிந்தர்**

பத்திரிகை வடிவம்
**சிவகுமாரன் சஞ்ஜீவன்.**B .Eng (Hons)



# ஊரில் உலகில் நடக்காதது - இன்று இங்கு நடந்துபோச்சு! என்றாகிவிடும்!

இன்று எங்கு பார்த்தாலும் பாலியல்பலத்காரம் பல வழிகளில் அரங்கேறுவதைக் காணமுடிகிறது.

புதுடில்லியில் மாணவி ஒரு வரைக்கடத்திச்சென்று கயவர்கள் சீரழித்தனர். மாணவி உயிர்துறந்தாள். இச்சம்பவம் பேரூந்தில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பல போராட்டங்கள் வெடித்தன.

ஒரு புறம் போராட்டங்கள் வெடிக்க மறுபுறம் அதே வழி யைப்பின்பற்றி பல பெண்களை பேரூந்திலும், காரிலும், புகையிரதத்திலும் என மாற்றிமாற்றி பெண்கள் வாழ்வைச் சீரழித்தனர்.

காமுகர்களின் சிந்தனையில் எப்பொழுதும் ஒரு பாலியல் படம் ஓடிய வண்ணமே இருக்கும். அவர் சந்தர்ப் பத்தை மட்டும் பார்த்து இருப்பதில்லை! எங்கு எப்படி எல்லாம் அரங்கேறுகின்றன என்ற நுட்பத்தையும் பார்த்துக் காத் திருப்பார்கள்.

அவர்களுக்கு அப்படி ஒரு நிகழ்வு புதுவிதமாக நடந்து விட்டால் அதுபோதும். அதன் அடிப்படையில் அட நாம் விட்டுவிட்டோமே என ஆனந்த ஆவேசத்துடன் கிளம்பி விடுவார்கள்.


கொலை கொள்ளை கற்பழிப்பு இவை மூன்றும் இந்த அப்படையில்தான் தமது நகர்வுகளை மேற்கொள்கின்றன. அதனால்தான் திரைப்படங்களில் கூட இப்படியான காட் சிகள் மீது, தணிக்கைக்குழு கைவைக்கின்றது.

உண்மையில் ஒரு திரைப்படத்தினைப் பார்த்து அந்த வழியில் கயவர்கள் நடப்பதைவிட, ஒரு படி மேலே நிஜவாழ்வில் நடக்கும் அச்செயல்களைப் பார்த்தே அதிகமாக ஈடுபடுகின்றனர்.

காரணம், திரைப்படம் அதில் இடம்பெறும் வன்முறைக் காட்சிகள் பெரும்பாலும் யதார்த்தமாக அமைவதில்லை. பட்டப்பகலிலே முதல்வரின் மகளை அவரது வீட்டு முற்றத்தில் இருந்து, ஒருவர் கடத்திச்சென்று,வழியில் வரும் காவலர்களை எல்லாம். கையை முறுக்கி நரம்பு புடைக்க, கால்களால் நிலத்தைக்கிளறி, டாமார் டுசும் என்ற சத்தத்துடன் ஒரு போடுபோட்டு, பெரும் மதில் உடைந்து விழ, மேலே ஆகாயத்தில் எதிரிகள் பறக்க, இவன் பின்னே புயலெனச் சருகுகள் பறக்க, கடத்திச் செல்வது எப்படி யதார்த்தமாக அமையும்.

எனவேதான் காமுகர்களது பார்வை, இன்று இயல்பாக, எங்கு எங்கு எப்படி பெண்களைச் சீரழிக்கிறார்கள், என்பதனை உன்னிப்பாக அவதானிக்கின்றது.

எனவே திரைப்படங்களுக்கு இருப்பது போன்ற, ஒருவகைத் தணிக்கை இப்படியான செய்திகள் பிரசுரமாவதிலும் கையாளவேண்டும்.



இன்று நமது தாயகத்தை எடுத்துக்கொண்டால் அங்கு அன்று, இன்று இந்தியாவில் நடைபெறும் இப்படியான வன்முறைகளுக்கு ஈடாக அங்கும் அரங்கேறத் தொடங்கி விட்டது.

அண்மையில் பல செய்திகள் வந்தன. ஆனால் அவற்றை முழுமையாக எழுத மனம் ஒப்பவில்லை. இருந்தாலும் சிறு சிறு குறிப்பாகச் சொல்கின்றோம். ஆரம்பப்பாடசாலை காவலர் (70 வயது) மாணவிமீது பலாத்காரம்,தகப்பன் மகள் மீது தகாத உறவு, தாயின் காதலன் மகளைக் கடத்தினான், இப்படிப்பல பத்திரிகைகளில் வந்த வண்ணம் உள்ளன.

இவை தொடர்ந்து பத்திரிகைளிலும் வானொலிகளிலும் நல்லநோக்கில் அதாவது மக்களே விழப்பாக இருங்கள்! என்று சொல்லவந்தாலும். அங்கு எதிர்மறை விழைவுகளே அதிகமாக்குகின்றன.

கயவர்களுக்கு காட்சியமைத்துக்கொடுக்கும் வேலை அதனால் சுலபமாகிறது. பாதிக்கப்பட்டவர்களது மனநிலையில் மாற்றம்.

ஊரில் உலகில் நடக்காதது - இன்று
இங்கு நடந்துபோச்சு!

என்று எண்ணும் எண்ணம் மேலோங்கும். நாளடைவில் காதலுக்கும் அதன் கட்டுப்பாட்டுக்கும் நாட்டில் என்ன நடந்ததோ அதனைவிட பல்மடங்கு மேலாக இவை சர்வசாதாரணமாக வாய்ப்புள்ளது. எனவே இப்படியான செய்திகளை சொல்லும் முறை அறிந்து, அதனை அகற்றும் வழிகண்டு பொறுப்புடன் நடக்கவேண்டும்.

இதனை எந்த அரசும் எமக்காகச் செய்யாது! நமது மனசு ஒன்றுதான் அதனைச் செய்யும்!

# இலங்கை அரசு வெளிநாடுகளில் புகலிடம் கோருவோரின் குடியுரிமையை நீக்குகிறது?

வெளிநாடுகளில் அடைக்கலம் கோருவோரின் குடியுரிமை யை நீக்கும் புதிய சட்டம் ஒன்றை சிறிலங்கா கொண்டு வரவுள்ளது. இந்தத் தகவலை சிறிலங்காவின் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவ தாகவும், அது நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டு விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

புதிய சட்டத்தின் படி, வெளிநாடுகளில் புகலிடம் கோரியோர், சிறிலங்காவில் இரட்டைக் குடியுரிமைபெற விண்ணப்பிக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் இரட்டைக் குடியுரிமைப பெறுவதைத் தடுக்கும் நோக்கிலேயே சிறிலங்கா பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச இந்த புதிய விதிமுறையைக் கொண்டு வரவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# காதோடு காதாக

கலைக்கதிர் கதிர்.துரைசிங்கம்.




வாருங்கோ வல்லிபுரம் வந்து வீட்டைப் பாருங்கோ!
வாங்கினியோ வீடு சிவா, வங்கிக் கடன் எடுத்தனியோ?

கடன் இன்றி காட் இன்றி கதை என்ன கனடாவில்
களைப்புக்கு என்ன கொண்டுவர குளிராயோ! சூடாயோ?
குளிருக்கு கொதிக்கின்ற கோப்பியைத்தான் கொண்டுவாரும்.

கோப்பி உள்ள கோப்பி உண்டு கோப்பியில்லா கோப்பியும் உண்டு
Caffeinated, De-caffeinated இரண்டில் எதுவேணும் உமக்கு?
களைக்கு நல்லது Caffeinated, அதையே கொண்டுவாரும்.

அதிலேயும் Black எண்டும் White எண்டும் இரண்டுண்டு
எதுவேணும் என்று சொன்னால் இதமாகத் தந்திடலாம்.
வெறும் கோப்பி என்னத்துக்கு பால்கோப்பியையே கொண்டுவாரும்.

ஆடையுள்ள பாலை இங்கே Cream எண்டு சொல்லுகினம்
ஆடை இல்லா பாலுக்கு Milk எண்டு பேர் இதிலை எது?
நிர்வாணப் பாலையே நிறையவிட்டுக் கொண்டுவாரும்.

ஒரு வீதம், இரு வீதம், நான்கு வீதம் என்று மூன்று
எந்த வீதம் உமக்கு வேண்டும் என்று சொல்லும்?
நாலுதான் நல்லது போட்டு நன்றாய்க் கொண்டுவாரும்.

மண்ணிறச் சீனி உண்டு வெண்ணிறச்சீனி உண்டு.
எந்தச் சீனி ஏற்றது என்று நீர்தான் முடிவு சொல்ல வேண்டும்.
மண்ணிறத்தை மறந்து விட்டோம் இனி என்ன வெள்ளை தானே.

சீனி உள்ள சீனி உண்டு, இல்லாமலும் சீனி உண்டு
Sugar M Sweetener M இரண்டடில் எதைப் போடுத்தர?
சர்க்கரை வியாதி சற்று உண்டு Sweetener தான் சரி.

மஞ்சள், நீலம், மண் என மூன்று நிறம், இவற்றில்
எது பிடிக்கும் என்று வல்லி நீர்தான் சொல்ல வேண்டும்?
நீல நிற Sweetener ஒன்று போதும் சிவா - இனி என்ன?

கேட்டிரோ வடிவு! இந்தக் கோப்பியினை போட்டுத்தாரும்
கொஞ்சம் பொறும் கொஞ்சம் பொறும் வல்லி நானும் மறந்து போனேன்
என்ரை அவ வேலையாலை வரக் கொஞ்ச நேரமாகும்.
எண்டாலும் நீர் கேட்ட கோப்பி குடிக்கத்தான் வேணும்.

வாரும் உங்கை Tim Horton கடை இருக்கு பக்கத்தில்
ஆறுதலாய் போய் இருந்து அனுபவிச்சுக்குடித்திடலாம்.

நன்றி : தமிழர் தகவல் 22 வது ஆண்டுமலர்.

**படித்ததில் கிடைத்தது:** செ.செல்வகுமார் - ராட்டிங்கன்

# நாம் ஏன் ஒத்துப் போவதில்லை?



ஒரு சிறு கதை சொல்லப் போகிறேன்.
இப்போது பேசிய சிறந்த பேச்சாளர் 'நாம்ஒருவரையொருவர் தூற்றுவதை நிறுத்த வேண்டும்' என்று கூறியதைக் கேட்டீர்கள். இவ்வளவு வேறுபாடுகள் இருப்பதற்காக அவர் வருத்தப்பட்டார். இந்த வேறுபாடுகளுக்குக் காரணம் என்ன என்பதை விளக்க ஒரு கதை சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஒரு கிணற்றில் தவளை ஒன்று வாழ்ந்தது. நீண்ட காலமாக அங்கு அது வசித்து வந்தது. அங்கேயே பிறந்து அங்கேயே வளர்ந்த அந்தத் தவளை சின்னஞ் சிறியது. அது கண்களை இழந்து விட்டதா இல்லையா என்று சொல்வதற்கு நல்லவேளையாக அங்கே பரிணாமவாதிகள் யாரும் இல்லை. நம் கதைக்காக அதற்குக் கண்கள் இருந்தன என்றே வைத்துக் கொள்வோம். அந்தத் தவளை நாள்தோறும் நீரிலிருந்து புழு பூச்சிகளையும் கிருமிகளையும் மிகவும் சுறுசுறுப்பாக அகற்றிச் சுத்தப் படுத்தியது. அந்தச் சுறுசுறுப்பு நம் தற்காலக் கிருமி ஆராய்ச்சி யாளர்களுக்கு இருந்தால் அது அவர்களுக்குப் பெருமை தரும் விடயமாகும். அவ்வாறே வாழ்ந்ததால் அந்தத் தவளை சிறிது பருத்தும் விட்டது.

ஒருநாள் கடலில் வாழ்ந்துவந்த தவளையொன்று அங்கு வந்து அந்தக்கிணற்றில் விழுந்து விட்டது.
'நீ எங்கிருந்து வருகிறாய்?'
'கடலிலிருந்து'
'கடலா? அது எவ்வளவு பெரியது? எனது கிணற்றளவு பெரியதாயிருக்குமா?' என்று கூறி ஒரு பக்கத்திலிருந்து எதிர்ப்பக்கத்திற்குத் தாவிக் குதித்தது கிணற்றுத் தவளை.
'நண்பா இந்தச் சின்னக் கிணற்றோடு எப்படிக் கடலை ஒப்பிட முடியும்?' என்று கேட்டது கடல் தவளை.
கிணற்றுத் தவளை மறுபடியும் ஒரு குதிகுதித்து 'உனது கடல் இவ்வளவு பெரிதாய் இருக்குமோ?' என்று கேட்டது.
'சேச்சே! என்ன முட்டாள்தனம்! கடலை உன் கிணற்றோடு ஒப்பிடுவதா?'
'நீ என்ன சொன்னாலும் சரி என் கிணற்றைவிட எதுவும் பெரிதாக இருக்கமுடியாது. கண்டிப்பாக இதைவிடப் பெரிதாக எதுவும் இருக்க முடியாது. இவன் பொய்யன் இவனை வெளியே விரட்டுங்கள்!' என்று கத்தியது கிணற்றுத் தவளை.

காலம் காலமாக இருந்து வரும் கஷடம் இதுதான்.
நான் இந்து. நான் என் சிறிய கிணற்றிற்குள் இருந்துகொண்டு என் சிறு கிணறுதான் முழுவுலகம் என்று நினைக்கிறேன். கிறிஸ்தவன் தனது மதமாகிய சிறு கிணற்றிற்குள் அமர்ந்து கொண்டு தன் கிணறுதான் முழுவுலகம் என்று நினைக்கிறான் அவ்வாறே முகம்மதியனும் தன் சிறு கிணற்றில் உட்கார்ந்து கொண்டு அது தான் முழுவுலகம் என்று நினைக்கிறான். நமது இந்த சிறிய உலகின் எல்லைகளைத் தகர்த்தெறிய அமெரிக்கர்களாகிய நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கும் பெரிய முயற்சிக்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். வருங்காலத்தில் உங்கள் விருப்பம் நிறைவேற இறைவன் அருள்புரிவான் என்று நம்புகிறேன்.
(சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நகரச் சொற்பொழிவு: 13. செப்டம்பர் 1883)



# தமிழ்ப் பெண்களின் திருப்தியான முன்னேற்றம்!

## தெய்வா மோகன்- கனடிய சட்டத்தரணி

1983ம் ஆண்டுதான் எம்மவர்கள் இங்கு தொகையாக வர ஆரம்பித்தனர். அதற்கு முன்பு எப்படி இருந்தோம் என ஒரு சிறு அறிமுகம். அப்போது ஆலயங்கள், தமிழ்க் கடைகள் எதுவும் கிடையாது. நாங்கள் பொதுவாக சந்திக்கும் இடம் திரு. சிவா-ஜனனியின் வீடு. இலங்கையில் நடக்கும் பிரச்சனைக்கு என்ன செய்யலாம் என்ற ஆலோசனைக் கூட்டமோ அல்லது நண்பர்களின் பிறந்தநாளோ, எல்லாரையும் அன்புடன் வரவேற்பார் ஜனனி. எங்கள் திருமணமும் அங்குதான் நடந்தது. சுருக்கமாக சொன்னால் அந்த வீடுதான் எங்கள் Banquet Hall.



அந்த நேரத்தில் மிகக் குறைந்தளவு பெண்களே இருந்தோம். அதனால் என்னவோ எங்களுக்கு நல்ல மரியாதை. ஆண்களும் எங்கள் கல்வித் தகைமையை மதித்து நடந்தனர். உதாரணமாக நான் கனடாவுக்கு புதிதாக வந்திருந்தாலும் தமிழீழச் சங்கத்தின் காரியதரிசி பொறுப்பை எனக்கு அளித்தது அந்த நேரம் பெண்களுக்கு காட்டப்பட்ட மரியாதையே. ஆனால் இந்த மரியாதையெல்லாம் வேலை தேடிப் போகும் இடங்களில் கிடைக்கவில்லை. ஆண்கள் என்றால் உடனே Security guard வேலை கிடைத்துவிடும். ஆனால் எம்மைப் போன்ற படித்த பெண்களுக்கு தகுந்த வேலை கிடைப்பது பெரிய சவாலாகவே இருந்தது. வீட்டு வேலையும் இலகுவாக இருக்கவில்லை. இப்போதுபோல் தயாரித்த உணவுகள், மிளகாய்த் தூள், அரிசி மா எல்லாம் வாங்க முடியாது. அந்த மிளகாய்த் தூள் தயாரித்த அனுபவத்தை எழுதுவதென்றால் இந்தக் கட்டுரை இப்போது முடியாது. எனவே 83ம் ஆண்டிலிருந்து இங்கு வந்த பெண்களைப் பற்றியும் அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளையும், முன்னேற்றத்தையும் பார்க்கலாம். இங்கு எங்கள் பெண்களை முதியோர், திருமணமாகி சிறு பிள்ளைகளுடன் வந்தவர்கள், தனியே வந்த திருமணமாகாத இளம்பெண்கள் எனத் தரம் பிரித்து முதலில் முதியோரின் அனுபவத்தைப் பார்ப்போம்.

பெரும்பான்மையான முதியோர் பிள்ளைகளினால் sponsorship மூலம் வந்தவர்கள். தந்தை படித்து வேலை செய்த அனுபவம், தாய் அநேகமாக படிக்காதவர். வாழ்நாளில் வேலைக்கே போனதில்லை. இங்கு வந்தவுடன் பிள்ளைகளுடன் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். பேரப்பிள்ளையைப் பார்ப்பதே அந்தத் தாயின் முழுநேர வேலை. அனேகமான ஆண்கள் ஆங்கில அறிவு இருந்ததால் ஏதாவது சிறு வேலைக்காவது போக ஆரம்பித்தனர். ஆனால் பெண்களின் நிலைமை தான் வேதனை தரும் விடயம். சமைக்க விடுவதில்லை, அடுப்பு பழுதாகி விடும். பழைய சாப்பாட்டைச் சூடாக்கிச் சாப்பிட வேண்டும். பேரப் பிள்ளைகள் பாடசாலை போய்விட்டால் வீட்டில் தனியாக இருக்க வேண்டும். அங்கு அயலவர், உறவினர் என்று சுதந்திரமாக இருந்தவர்களுக்கு இந்த அனுபவம் கசப்பாகவே இருந்தது. பிள்ளைகள் வேலை முடிந்து வந்தவுடன் களைத்து விடுவார்கள். சனி, ஞாயிறு மட்டுமே எங்காவது வெளியில் போகலாம். அந்த நேரத்தில் முதியோர் அமைப்பு, முதியோருக்கான வசிப்பிடங்கள் என இருக்கவில்லை. எவ்வளவு காலம்தான் பொறுப்பது? தங்கள் போக்கில் சுதந்திரமாக Social Assistance எடுக்க ஆரம்பித்தனர். இதனால் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் பிரச்சனை. ஏனெனில் sponsorship இல் வந்தவர்கள் இப்படியாகப் பணம் எடுத்தால் அது பிள்ளைகளைப் பாதிக்கும். இதையே காரணமாக வைத்து தாயையும் பிள்ளைகளையும் பிரித்து விடும் மனைவிமாரையும் பார்த்திருப்பீர்கள்.

நாளடைவில் எமது சமூகம் வளர்ந்ததுபோல முதியோருக்கான சேவைகளும் உருவாகின. இப்போது அவர்களுக்கென யோகா வகுப்புகள், நீந்துதல், நடத்தல் போன்ற பல வகுப்புகள். ஊரிலே இருப்பதுபோல பல ஆலயங்கள். மற்றவர்களிடம் தங்கியிருக்காமல் அவர்களுக்காக விசேட வாகன சேவை, புனித யாத்திரை, சுற்றுலாக்கள் என பல பொழுதுபோக்கும் ஏற்பாடுகள். இந்த மாற்றங்களினால் பல முதிய பெண்கள் சந்தோஷமாக இருந்தாலும் அவர்களது நெஞ்சத்தில் தாயக எண்ணத்தைச் சுமந்தபடிதான் வாழ்கிறார்கள்.

அடுத்ததாக, உயர்கல்வி பெற்ற வேலை அனுபவமுள்ள முதிய பெண்கைளப் பார்த்தால் அவர்களது சேவையும், தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஆற்றலும் வளர்ந்து கொண்டு வருகிறது என்றே சொல்லலாம். அவர்கள் தங்களுடன் கொண்டு வந்த கல்வி அறிவு, வேலை அனுபவம் அவர்களைச் சுதந்திரமாக நடக்க வைத்தது. தங்கள் அனுபவங்களை, அறிவை, கற்பனைகளை சமூகசேவை செய்வதன் மூலம் எழுதுவதன் மூலம், தொலைக்காட்சி பத்திரிகைகள் சஞ்சிகைகள் மூலம் பகிர்ந்து கொள்கின்றனர். இதை எழுதும்போது என் மனதில் சில பெயர்கள் - மணி பத்மராஜா, குறமகள், லலிதா புரூடி - இவர்களைப் போல இன்னும் பல பெண்கள் இருக்கலாம். ஆனால் ஆராய்ச்சி செய்யாமல் அவசரமாக மனதில் தோன்றுவதை எழுதுவதால் வேறு பெயர்களைக் குறிப்பிடவில்லை.

அடுத்தபடியாக சிறுபிள்ளைகளுடன் அல்லது தனியாக வந்த திருமணமான பெண்களைப் பார்க்கலாம். அவர்கள் வந்த காலகட்டத்தில் எங்கள் சட்ட நிறுவனம்தான் தமிழ் பேசும் வழக்கு நிரல்களை கொண்டிருந்தது. அதுவும் நான் பெண் வழக்கறிஞர் என்பதால் பெரும்பான்மையான பெண்கள் என்னிடம் வந்தார்கள். நான் வெறும் சட்ட சேவையுடன் நிறுத்தவில்லை. காரணம் அவர்களுக்கு உயர்கல்வி இல்லை, ஆங்கிலம் பேச முடியவில்லை. தனியாக பொதுப் போக்குவரத்தில் வரவே பயந்தார்கள். கண்களைக் கட்டி நடுக்காட்டில் விட்டதுபோல தவித்தனர். அக்காலத்தில் தமிழ் பேசும் மருத்துவர்களும் குறைவு. அவர்களுக்கு மருத்துவரை அறிமுகம் செய்வது, பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்ப்பது, ஆங்கில வகுப்பு ஒழுங்கு பண்ணுவது எனப் பல உதவிகள் செய்தேன். அந்த நேரத்தில் 'welcome house' இல் வேலை செய்த திருமதி பார்த்திபன் எங்கள் பெண்களுக்கு ஆதரவாக உதவி புரிந்தார்.

குடும்பத்தைப் பிரிந்து வந்த பெண்களுக்கும் பல பிரச்சனைகள் ஏற்பட்டன. பிள்ளைகளை பிரிந்து வந்த வேதனை, தனியே இருக்கும் சோகம் எல்லாம் சேர்ந்து அவர்களில் பலருக்கு மன அழுத்தம் ஏற்பட்டது. அதை அவர்களுக்கு புரிய வைத்து, அவர்களை மருத்துவர்களிடம் அனுப்புவதே சிரமமாக இருந்தது. ஆரம்ப காலத்தில் இப்படியான அகதிப் பெண்களுக்கு தகுந்த சிகிச்சை வழங்கி உதவி செய்த டாக்டர். ரட்ணநாதருக்கும், பின்னர் உதவிய டாக்டர் சூரியபாலனுக்கும் எங்கள் சமூகத்தின் சார்பாக நன்றி.

தனியே வந்த பெண்களுக்கு வாகனம் ஓட்டத் தெரியவில்லை. வாகனம் வாங்கும் வசதியும் இருக்கவில்லை. இதனால் பிற ஆண்களிடம் உதவி கேட்க நேர்ந்தது. அந்த உதவியே உறவாக வளர்ந்து சில பெண்களின் குடும்பப் பிரச்சனையாக உருவெடுத்தது. கணவன் பின்பு கனடாவுக்கு வந்தாலும் இப்படிப்பட்ட உறவு காரணமாக குடும்பப் பிரிவு ஏற்படத் தொடங்கியது. ஆரம்பத்தில் நண்பர்கள், வீட்டுப் பெரியவர்கள் தலையிட்டு குடும்பங்களைச் சேர்த்து வைத்தனர். ஆனால் காலப்போக்கில் பல்வேறு காரணங்களினால் எங்கள் கலாசாரம், பண்பாடு எல்லாம் மாறத் தொடங்கியது.

தொடர்ச்சி 6ம் பக்கம்

ASIJAH EUROPE
Our Contact Details:
Asijah-Europe
De Steven 12
9206 AX Drachten
The Netherlands
Tel: +31 512 54 18 31
+31 512 53 91 44
Fax:+31 512 54 38 66
Email: info@asijah.com
Hotmail:
asijaheurope@hotmail.com

ASIJAH EUROPE
Wholesale Distributors of finest Sri Lankan Grocery Foods
www.asijah.com
ஐரோப்பா எங்கும் இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மொத்த விற்பனை செய்கின்றோம்.


KIOSK & ASIAN MARKT
Lebensmittal
பசுமையான மரக்கறிகள்
கடல் உணவு வகைகள்
இன்னும் பலசரக்குப் பொருட்கள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Tel:02332 50 97 568
Hagener Str.158
58285 Gevelsberg
உரிமையாளர்:
த.மனோகரன்




# மிளகின் அற்புதமான மருத்துவ குணங்கள்

வரலாற்று ஆசிரியர்கள் கூற்றுப்படி கிமு 3000 ஆம் ஆண்டுகளிலிருந்து சிறந்து விளங்கிய கடல் வியாபாரத்தில் தங்கம் போல் விலை மதிக்க முடியாத ஒன்று மிளகு. மிளகை வீணடித்தால் உப்பு போட்டு அதில் நாள் முழுவதும் மண்டியிட வைக்கும் தண்டனை போர்ச்சுகல் நாட்டில் நடைமுறையில் இருந்தது.

மிளகில் உள்ள சத்துக்கள்:

தாது உப்புகள்

1. கால்சியம்
2. பாஸ்பரஸ்
3. இரும்பு

வைட்டமின்கள்

1. தயாமின்
2. ரிபோபிலவின்
3. ரியாசின்



### சளித் தொல்லைக்கு:

மிளகை நன்றாக பொடித்து அதனை தேனுடன் கலந்து சாப்பிட்டு வர சளி தொல்லைகள் மற்றும் சளியினால் ஏற்படும் தொல்லைகளான மூக்கு ஒழுகுதல் குணமாகும். அதிகமாக சளி தொல்லைகள் உள்ளவர்கள் மிளகை நெய்யில் வறுத்து பொடித்து அதனை தினம் அரை ஸ்பூன் மூன்று வேளை சாப்பிட்டு வர குணமாகும்.

கொஞ்சம் மிளகு, ஓமம், உப்பு சேர்த்து மென்று சாப்பிட்டு வந்தால் தொண்டை வலி குணமடையும். கல்யாண முருங்கை இலையுடன், அரிசி சிறிது மிளகு சேர்த்து அரைத்து தோசை செய்து சாப்பிட்டு வர சளி குணமாகும்.

### பற்களுக்கு:

மிளகுடன் உப்பு சேர்த்து பல் துலக்கினால் பல்வலி, சொத்தை பல், ஈறுவலி, ஈறுகளிலிருந்து இரத்தம் வடிதல் குணமாகும், பற்களும் வெண்மையாக இருக்கும், வாயில் துர்நாற்றத்தை போக்கும்.

### தலைவலி:

மிளகுடன் வெல்லம் சேர்த்து காலையும் மாலையும் சாப்பிட்டு வந்தால் தலைவலி, தலைபாரம் குணமாகும். மிளகை அரைத்து அதனை தலையில் பற்று போட்டால் தலைவலி குணமாகும். மிளகை சுட்டு அதன் புகையினை இழுத்தால் தலைவலி தீரும்.

இரத்தசோகைக்கு:

கல்யாணமுருங்கை இலை, முருங்கை இலை, மிளகு மற்றும் பூண்டு சேர்த்து அவித்து சாப்பிட்டு வந்தால் இரத்தசோகை குணமாகும் .

### பசியின்மைக்கு:

ஒரு ஸ்பூன் அளவு மிளகை வறுத்து பொடி செய்து அதனுடன் கைபிடியளவு துளசியை சேர்த்து கொதிக்க வைத்து அதனை ஆற வைத்து அதனுடன் சிறிது அளவு தேன் கலந்து சாப்பிட்டு வர பசியின்மை குணமாகும்.

மிளகு வயிற்றில் உள்ள வாய்வை அகற்றி உடலுக்கு வெப்பத்தை தருவதோடு வீக்கத்தை கரைக்கும் தன்மையுடையது. மிளகு உணவை எளிதில் செரிக்க வைக்கும் தன்மை கொண்டது. மிளகு, சுக்கு, திப்பிலி சேர்த்து சாப்பிட்டு வந்தால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

மிளகு இரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை கொண்டது.

நன்றி: முகப்புத்தகம்: ஜலஜா-ரகு

## தமிழ்பெண்களின்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

விவாகரத்து, குடும்பம் பிரிவது என்பது சர்வசாதாரணமாகி விட்டது. எங்கள் கலாசாரத்தில் இருக்கும் குடும்ப விழுமியத்தைப் பொதுவாகக் காண முடியவில்லை. ஆரம்பத்தில் கணவன் குடிப்பவர், அடிப்பவர் என்பதால் மனைவி பிரிந்தா. அது நியாயமானது. ஆனால் மற்றவர்களின் தவறான புத்திமதியைக் கேட்டு ஒரு சிறு சம்பவத்துக்கு பொலிஸை அழைப்பது, அரசாங்கத்தின் பாதுகாப்பு இல்லத்துக்கு போவதால் அந்தக் குடும்பம் நிரந்தரமாகப் பிரிய நேர்கிறது. பெண்கள் வேலைக்குப் போவதால் ஒரு ஆணிடம் தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை என்பதும் இன்னொரு காரணம். அதே நேரத்தில் பெண்கள் பல துறைகளிலும் முன்னேறி வருவதைப் பார்க்க பெருமையாகவும் இருக்கிறது. பெண் என்பவள் முதலில் ஒரு தாய் என்பதை மறக்கா மலிருந்தால், குடும்பம் பிரிவதால் பிள்ளைகள் எப்படிப் பாதிக்கப்படுவார்கள் என்பதை நினைத்தால், பல குடும்பப் பிரிவுகளைத் தடுக்க முடியும்.

அப்படியாக வந்த பெண்பிள்ளைகளுக்கு அனேகமாக உறவினர்கள் கனடாவில் இருந்தபடியால் பெரிதாகப் பிரச்சனைகள் இருக்கவில்லை. மொழிப் பிரச்சனை இருந்தாலும் ஆங்கிலத்தை விரைவில் கற்றுக் கொண்டனர். தவிர பாடசாலையில் மற்றைய தமிழ் மாணவர்களின் ஆதரவும் இருந்தது. அவர்கள் படித்து முடித்து வேலை பார்க்கும்போது பெற்றோர் பேசிச் செய்த திருமணத்தால் பலவித பிரச்சனைகளை பார்க்கக் கூடியதாக இருந்தது. சில பெண் பிள்ளைகள் தாய்நாட்டுக்கு சென்று பெற்றோர் விரும்பியபடி மணம் புரிந்தாலும் மணமகன் இங்கு வரமுன்பு மனதை மாற்றி விவாகரத்துக்கு போயிருக்கின்றார்கள். அப்படியே மணமகன் இங்கு வந்தாலும் பெண்ணின் நாகரிகம், முன்னேற்றம் போன்றவற்றுடன் ஒத்துப்போக முடியாமல் குடும்பத்தில் பிரச்சனை.

சில பெண்கள் 16 வயது வந்தவுடன் தங்கள் இஷ்டப்படி வாழ்வதற்காக நண்பர்களுடன் வாழ முற்படுவதும் எங்கள் சமுதாயத்தில் பிரச்சனை.

இங்குள்ள பல பெண்களுக்கு ஆரம்பத்தில் ஆங்கிலம் தெரியாது. அதனால் பாடசாலையில் நடக்கும் கூட்டங்களுக்கு போவதற்கு, பேசுவதற்கு பிறரின் உதவியை நாட வேண்டி இருந்தது. இப்போது பெண்களிடம் நிறைய முன்னேற்றம். பாரதி கண்ட புதுமைப் பெண்கள் என்றே சொல்லலாம். வாகனத்தில் பிள்ளைகளை பாடசாலைக்கு மாத்திரமல்ல, சங்கீத வகுப்பு, நடனம் என பல இடங்களுக்கும் அழைத்து செல்கிறார்கள். ஆசிரியர்களுடன் பிள்ளையின் கல்வியைப் பற்றி மிக ஈடுபாட்டுடன் உரையாடுகிறார்கள். அண்மையில் ஒரு பெண் என்னிடம் வந்து தனது பெண்ணின் கல்வியைப் பற்றி அதிபருடன் கதைக்க வழக்கறிஞர் வேண்டும் என்று கேட்டார். எவ்வளவு முன்னேற்றம்!

அடுத்ததாக மிக இளவயதில் திருமணம் செய்யாமல் வந்த பெண்களின் வாழ்க்கையைப் பார்க்கலாம். மிகக் குறைவான பெண்களே இப்படி அகதியாக வந்தனர்.

இதை எழுதும்போது தனியாக அகதியாக வந்த ஒரு பெண்ணின் சோகக் கதையும் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த இளம்பெண்ணுக்கு கனடாவில் ஒருவரும் இல்லை. ஆங்கிலம் படித்துவிட்டு ஒரு கடையில் வேலை செய்தார். அடிக்கடி பெற்றோரை கனடாவுக்கு கூப்பிடுவது பற்றி என்னிடம் பேசுவார். அதற்காக பணமும் சேகரித்தார். இன்னொரு வேலையும் தேடிக் கொண்டிருந்தார். ஒருநாள் பொலிஸ் என்னை அழைத்து அவவின் purse க்குள் எனது Business card இருந்ததாகவும் அவ தற்கொலை செய்து கொண்டார் எனவும் அறிவித்தார்கள். மிக அதிர்ச்சியாக இருந்தது. பாவம், தனது பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்ள ஒருவரும் இல்லாத நிலையில் அந்த முடிவை எடுத்தார். அந்த நேரத்தில் அவவுக்கு ஆதரவு வழங்கக்கூடிய அமைப்புகள் இருக்கவில்லை. ஆனால் இப்போது இங்கு எவ்வளவோ அமைப்புகள், பெண்களின் மனநிலை, பாதுகாப்பு என்று பல சமூக சேவையாளர்கள் பெண்களுக்கு ஆதர வளிக்கிறார்கள்.

இறுதியாக பெருமையுடன் குறிப்பிட வேண்டியவர்கள் எமது இளைய சந்ததி பெண்பிள்ளைகள். அரசியல், கலை, விளையாட்டு என பல துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள். எங்கள் முதல் தமிழ் பெண் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகாவைப்போல இன்னும் பல பெண்கள் அரசியலில் ஈடுபட்டு சேவை செய்ய வேண்டும். பெரிய நிறுவனங்களில் Managing director, program manager, consultant, lawyers, doctors... என எங்கள் பெண்களைப் பார்க்கும்போது பெருமையாக உள்ளது. புலம்பெயர்ந்து வந்து வாழும் நாட்டையே தங்கள் நாடாக நினைத்து முன்னேறி வரும் பெண்பிள்ளைகளுக்கு வாழ்த்துக்கள்.

"One woman can change anything and many women can change every thing"



# ஸ்மாட் போன் கதை

- ஷம்மிக்கா



வேகமாக வளரும் தொழில் நுட்பத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் நானும் எனது கைத்தொலைபேசியை மாற்றுவதென முடிவு செய்து கொண்டேன்.

IPhone ஒன்றை வாங்குவதற்காக வியட்நாமியக் கடையொன்றிற்குப் போயிருந்தேன்.

"அப்பா.... காலத்துடன் நாங்கள் பயணம் செய்யவேண்டும்!

கார் இடையிலை நிண்டா... காட் அற்றாக் வந்தா" என்று ஐந்து வருடங்களுக்கு முன்பு ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த என் மகன் பெரியதொரு பட்டியலிட்டு என்னைப் பயப்படுத்தி யிருந்தான். அதற்கு முன்னர் என்னிடம் கைத் தொலைபேசி இருக்கவில்லை.

அவனது அட்வைஸ்சிற்கு கட்டுப்பட்டு மிகக்குறைந்த விலையில் ஒரு கைத்தொலைபேசி ஒன்றை வாங்கியிருந்தேன். இப்போது அதை மாற்றுவதற்குரிய காலம் வந்துவிட்டது.

மனைவி பிள்ளைகளுடன் போனால் பெரியதொரு 'பிளானி'ற்குள் என்னைத் தள்ளிவிடக்கூடும் என நினைத்து தனியே கடைக்கு வெளிக்கிட்டி ருந்தேன்.

நண்பன் ஒருவன் மலிவான கடையென ஒன்றை அறிமுகம் செய்திருந்தான். அங்கே வந்திருந்த கஸ்டமர்ஸ் எல்லாரிடமும் புதிது புதிதான கைத்தொலைபேசிகள் விதவிதமான நாத மெழுப்பிய வண்ணம் இருந்தன. அவர்களுடன் வரிசையில் நின்றுகொண்டேன். கவுண்டரில் மூன்றுபேர்கள் நின்றார்கள். எனது முறை வந்ததும் அவர்களிடமிருந்த பிளான்கள் பற்றிக் கதைத் தேன். நான் தற்போது பாவிக்கும் ரெலிபோனைப் பார்க்க முடியுமா என்று அவன் கேட்டான். பொக்கற்றுக்குள்ளிருந்த பழைய நோக்கியா போனை வெளியே எடுத்து அவனிடம் நீட்டினேன். அவன் பாம்பைக் கண்டுவிட்டவன் போல திடுக்கிட்டு, இரண்டு அடிகள் பின் நகர்ந்து மெதுவாக நழுவி உள்ளே ஓடினான். நான் எனது போனை உடனடியாக எனது பொக்கற்றுக்குள் செருகிக்கொண்டேன். கவுண்டரில் நின்ற மற்ற இருவரும் உதட்டிற்குள் புன்னகை ஒன்றைத் தவழவிட்டார்கள்.

அந்தப்புன்னகை எனக்கா, அல்லது உள்ளே சென்றவனுக்கா என்று தெரியாமல் மலங்க விழித்தேன்.

சற்று நேரத்தில் உள்ளே இருந்து ஒரு பெண் வந்து அந்தக்கவுண்டரில் நின்று கொண்டாள். அருகேயிருந்த ஒரு இருக்கையைக் காட்டி என்னை அதிலே அமரும்படி சொன்னாள்.

நேரம் நகர்ந்தது. ஒருவரும் என்னைக் கவனிப்பதாக இல்லை. என்னைக்கண்டு மிரண்டு உள்ளே சென்றவன்இ கதவொன்றை மெதுவாக நகர்த்தி நான் போய்விட்டேனா என்று பார்த்தான். கடைக்கு அவர்கள் இனத்தவர்கள் வருகின் றார்கள், போகின்றார்கள்.

"அவங்கடை கடை. வருவார்கள்.... போவார்கள். இதிலே நமக்கென்ன வேலை?" எழுந்து கொண்டேன். இன்னொருநாள் பார்த்துக் கொள் ளலாம் என்ற முடிவுடன் நடையைக் கட்டினேன்.

உடுப்புக்கடையொன்றிற்கு முன்னால் ராசன் அண்ணன் தனது காரை எடுத்து இடம் மாற்றிக் கொண்டு நிற்கின்றார். கார்க்கண்ணாடியூடாக எனக்குக் கையைக் காட்டினார். ராசன் அண்ணை எனது ஊரவர். அவருடைய அம்மா கைராசி இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா வந்திருக்கி ன்றார் என்று அறிந்திருந்தேன். அவ வந்து இரண்டு மாதங்கள் இருக்கும். இன்னமும் நாங்கள் அவரைப்போய் பார்க்கவில்லை.

இக்கணம் ராசன் அண்ணை பேசப்போகின்றார். அவர் தொடங்குவதற்கு முன்னால் நானே தொடங்கிவிட வேண்டும்.

"அண்ணை! இன்னும் உங்கடை அம்மாவை வந்து பார்க்கேல்லை. மகளின்ரை படிப்பு. ஒரே பிஷி"

"எனக்குத் தெரியும்தானே தம்பி. அதைப்பற்றி நான் ஒண்டும் குறையா நினைகேல்லை. அம்மா உள்பட எல்லாரும் உடுப்புக்கடைக்குள்ளைதான் நிக்கினம். ஒரு மணித்தியாலமாபோச்சு. இன்னும் உடுப்பு வாங்கினபாடில்லை. அதுதான் ஒருக்கா காரை மாத்தி விடுவோமெண்டு வந்தனான். இல்லாட்டி உடுப்புக்கு மேலாலை ஃபைன் கட்டவேண்டி வந்திடும்."

"அப்ப நல்லதாப்போச்சு. அம்மாவைப் பாத்து ஒரு ஹலோ சொல்லுவோம்."

இரண்டுபேருமாக கடைக்குள் நுழைந்தோம்.

உடுப்புப்போட்டுப் பார்க்கும் இடத்திற்கு முன்னால் எல்லாரும் குழுமி இருந்தார்கள். கைராசியக் காவைக் காணவில்லை.

"எங்கே கைராசியக்கா?"

"அப்பம்மா உள்ளுக்கை உடுப்புபோட்டுப் பார்த் துக் கொண்டு நிக்கின்றா" என்றாள் ராசன் அண்ணையின் கடைசி மகள். பேர்த்தியும் உரிச்சு வைச்சாப்போல கைராசியக்கா மாதிரித்தான். சூரியோதயத்திற்காகக் காத்து நிற்பவர்கள்போல அதைச் சூழ்ந்து எல்லாரும் நின்றார்கள்.

"இஞ்சை மீனாச்சியக்காவின்ரை மகன் சிவயோ கன் உங்களைப் பாக்கவெண்டு வந்து நிக் கின்றார்" ராசன் அண்ணை குரல் கொடுத்தார்.

> "ஒரு பெட்டைச்சியாலை முடியிற காரியம் ஆண்வர்க்கத்தாலை முடியாமல் போச்சுது எண்டதுதான் இப்ப என்ரை கவலை"

"ஏன் என்னைப் பாக்கிறதுக்கு இதுதானோ அவருக்குக் கிடைச்சிருக்கிற இடம்?" கைராசியக்காவின் குரல் உள்ளிருந்து கேட்டது. தொடர்ந்து கதவை நீக்கியபடி கைராசியக்கா காக்ரா சோளியுடன் வெளியே வந்தார். சூரிய உதயம்!

"அப்பம்மாவுக்கு நல்ல வடிவா இருக்கு. இதையே வாங்குவம்" என்றாள் பேத்தி.

அவவைப் பார்க்க சோளக்கொல்லை பொம் மைக்கு சொக்காய் புதுசா மாட்டினமாதிரி இருந்தது.

"போகிற போக்கிலை குண்டியிலை தட்டினா லைற் எரியுறமாதிரிச் சீலை இருந்தாத் தாங்கோ எண்டு கைராசி அக்கா கேட்டாலும் கேட்பா"

"என்ன கைராசியக்கா மொடேர்ணா நிக்கிறியள்?" எனது கேள்வி அவவைக் கோபப்பட வைத்திருக்க வேண்டும்.

"உனக்கடா வெளிநாடு வந்து திமிர் கூடிப்போச்சு. உனக்கொண்டு சொல்லிறன் கேள். 'காக்காய்ச் சோளி' போடவேண்டுமெண்டது என்ரை சின்ன வயசு ஆசை. இப்பதான் நிறைவேறியிருக்கு. அப்ப ஒரு பத்துப்பன்னிரண்டு வயசிருக்கும். என்ரை அப்பனிட்டைக் கேட்டன். என்னை மரத்தோடை கட்டி விளாசு விளாசெண்டு விளாசிப்போட்டான். பிறகு என்ரை புருஷனைக் கேட்டன். உஷூம்... பிறகு பிள்ளை! ஆர் உவன் ராசன் தான். உவனாலும் முடியாமல் போச்சு. இப்ப எத்தினையோ தலைமுறை கடந்து பேத்தி வாங்கித் தாறாள். ஒரு பெட்டைச்சியாலை முடியிற காரியம் ஆண்வர்க்கத்தாலை முடியாமல் போச்சுது எண்டதுதான் இப்ப என்ரை கவலை"

"அம்மா. உது வடிவா இருக்கு. உதையே வாங்குவம்" என்றான் ராசன். எல்லாரும் ஒத்துக் கொண்டார்கள்.

"நான் இந்த உடுப்போடையே வரப்போறன். நீ போய் கவுண்டரிலை காசைக் குடுத்திட்டு வா. நான் இந்தத் தம்பியோடை கதைச்சுக் கொண்டு நிக்கிறன்"

"நல்லா இருக்கு கைராசியக்கா.... இப்ப உங்களைப் பாக்க சிம்ரன் மாதிரி இருக்கு" கைராசியக்காவுடன் கதைத்துக் கொண்டிருக் கும்போது எனது ரெலிபோன் கிணுகிணுத்தது. மனைவிதான்.

ரெலிபோனைக் கையிலெடுத்து ஒரு ஹலோ சொல்லவில்லை. எனது ரெலிபோனைப் பறித்து அருகே இருந்த குப்பைக்கூடைக்குள் எறிந்தா கைராசியக்கா.

"எட அறுவானே! உனக்கு ஒரு ரெலிபோன் வாங்க வக்கில்லை. என்னோடை கதைக்க வந்திட்டாய். உதாலை ஒரு படம் எடுக்கலாமோ சொல்லு... இந்தாபிடி... இதிலை கதை!" என்றபடியே தனது மார்புக்குள் செருகியிருந்த கைத்தொலைபேசியை எடுத்து நீட்டினா கைராசியக்கா.

அது ஒரு 'ஐ போன் 5' என்று உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை.

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை தயாரித்து நாம் வழங்குகின்றோம்!

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

உணவு வீறியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.

NANDY'S CURRY'S & MORE WWW.NANDYS.DE

Düsseldorf

Mobil 0173-7424955

Tel:0211 76 91 974

www.Nandys.de

e.mail:info@nandys.de



## பல்கலாச்சார விருது பெற்ற ராதிகா மகாதேவா

அவுஸ்திரேலியாவில் தலைசிறந்த நாட்டியத் தாரகை யான திருமதி ராதிகா மகாதேவா அவர்களுக்கு 18.12.2012 அன்று பல்கலாச்சார விருது ஆஸ்திரேலியா மெல்போர்ன் ஆளுநர் பிரிமியர் Ted baillieu அவர்களால் வழக் கப்பட்டது.

இவர் தாயகத்தில் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தாயகத்தில் இருந்து ஆரம்பித்த கலைப் பயணத்திற்குகிடைத்த பெருமகுடமாக இவ்விருது கருதப்படுகின்றது. இவரது பல நாட்டிய நாடகங்கள் அரங்க அமைப்பிலும் நாட்டிய மரபிலும் சிறப்புற விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது.



## "நீ விளையாடுவாய் தானே நான் பொம்மையாகின்றேன் "

நெடுந்தீவு முகிலனின் 10வது தொகுதி "நீ விளை யாடுவாய் தானே நான் பொம்மையாகின்றேன் " ரில்கோ பூந்தோட்டத்தில் வெளியீட்டின் போது எடுக்கப்பட்ட படங்கள். இவரது படங்களும் கவிதைகளும் சொல்லும் முதற்செய்தி புதுமை.

படைப்பதில் புதுமை, படைத்ததைப் பரிமாறுவதிலும் புதுமை. கடந்த ஆண்டில் பேருந்து கவிதைகள் சிலவற்றை கொழும்பு யாழ்ப்பாணம் சொகுசு பஸ்சில் வெளியீட்டு நிகழ்வை நடத்தி அசத்தினார். பஸ்தரிப்பு நிலையத்திலும் அப்படி ஒரு நிகழ்வை நடத்திக் கலக் கினார். தற்போது. நந்தவனத்தில் தனது வனப்பான கவிதை தொகுதியை வெளியிட்டு மக்கள்மனதில் பூவாய்ப் பூக்கின்றார்.

அடுத்து "நீ என் நிலவு என்று" ஓர் கவிதைதொகுதியை நிலவில் வெளியிட வெற்றிமணி வாழ்த்துகிறது. இது பகிடி அல்ல! இன்று இளைஞர்கள் நினைத்தால் எதுவும் முடியும் என்பதைகுறித்தே இந்த வாழ்த்து.

வெற்றிமணியின் 21 வது வெளியீடாக வருகிறது
முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின்
பிஞ்சு முகத்தின் தேடல்
காலம்:07.04.2013 ஞாயிற்றுக்கிழமை
மாலை:4.30
மண்டபம்:
St.Monika Gemeindezentrum
Am kleinenberg .08
58239 Schwerte-Ergste- Germany
Tel: 02351/45 88 62
0157 88 77 31 56

# ஒரு நாளைக்கு 20,000 வார்த்தைகளைப் பேசுகிறார்களாம் பெண்கள்!



ஒரு நாளைக்கு 20,000 வார்த்தைகளைப் பேசுகிறார்களாம் பெண்கள்! பெண்கள்தான் அதிகம் பேசுபவர்கள் என்று கூறுவார்கள். அது உண்மைதானாம். ஆண்களை விட பெண்கள்தான் அதிகம் பேசுகிறார்களாம். அதாவது ஒரு நாளைக்கு அவர்கள் 20,000 வார்த்தைகளைப் பேசுகிறார்களாம். இது ஆண்களை விட பெண்கள் ஒரு நாளைக்கு 13,000 வார்த்தைகள் அதிகமாக பேசுகிறார்களாம்.

அறிவியல்பூர்வமான தகவல் ஒன்று இதைத் தெரிவிக்கிறது. இதுவரை பெண்கள் அதிகம் பேசுவார்கள் என்று சொல்லி வந்த நிலையில் அறிவியல்பூர்வமாகவே அதை உண்மை என்று சொல்லியுள்ளனர். ஆனால் பெண்கள் இவ்வாறு அதிக அளவில் பேச அவர்களது மூளையில் உற்பத்தியாகும் பாக்ஸ்பி 2 புரதம்தான் காரணமாம். இது பெண்களின் மூளையில் அதிகமாக சுரக்கிறதாம். இந்த பாக்ஸ்பி 2 புரதத்திற்கு அமெரிக்க ஆய்வாளர்கள் மொழிப் புரதம் என்று பெயரிட்டுள்ளனர். காரணம் இதுதான் பேச்சுக்களுக்கும் வார்த்தைப் பிரயோகத்திற்கும் முக்கியக் காரணம் என்பதால்.

எலிகளில் ஆண்கள்தான் வாயாடி

மனிதர்களைப் பொறுத்தவரை பெண்களின் மூளையில் இந்த புரதம் அதிகம் சுரக்கிறது. எலிகளில், ஆண் எலிகளின் மூளையில் இது அதிகம் சுரப்பதால் ஆண் எலிகளிடம்தான் சத்தம் அதிகம்

இதற்கெல்லாம் என் ஆய்வு வேண்டிக்கிடக்கிறது,வீட்டிலும் சரி தொழில் புரியும் இடத்திலும் சரி பெண்கள்தான் கதை கதையாகக் கதைத்துக்கொண்டு இருப்பார்கள். தொழில் புரியும் இடத்தைவிடுங்கள் வீட்டில் கதை கதையாகக் கதைக்கும் பெண்கள் ஒரு நாள் மௌனயுத்தம் புரிந்தால் வீடே என்னவோ மாதிரியாகிவிடும்.




Gopara Gnanam
சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலிவு விற்பனை
15.03.13-15.4.13 பசுமையான மரக்கறிகள் கடல் உணவுப் பொருட்கள் மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
பட்டுப்புடவைகள் சிறுவர் சிறுமிகள் ஆடைகள்
TEXTILES
Rheinische Str.81
44137 Dortmund- Germany
Tel: 0231/5450028
Mob: 01713306542

திருக்கணித ஜோதிடம்
ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450




# பெண்ணே! ஊருக்காய் வாழாதே! உனக்காய் வாழ்.



**சந்திரவதனா**
**யேர்மனி**

ஆணாதிக்க அடிமை விலங்குகளால் பிணைக்கப் பட்டிருக்கும் அத்தனை பெண்களுக்கும் அர்த்தம் நிறைந்த நாள். ஒடுக்கப் பட்டும், மனம் நெரிக்கப் பட்டும் இருந்த பெண்கள் தம் வலிமையை உணர்ந்து விலங்கை ஒடிக்கத் துணிந்து ஓங்கிக் குரல் கொடுத்த நாள்.

1857 ம் ஆண்டில், போரின் காரணமாக தொழி லாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. அதனால் நிலக்கரிச் சுரங்கங்களிலும், புடவை ஆலை களிலும், வர்த்தக நிறுவனங்களிலும், தொழிற் சாலைகளிலும் பெண்கள் வேலை செய்ய வேண்டியதொரு கட்டாயம் ஏற்பட்டது.

அது வரை காலமும், மென்மையானவர்கள், வீட்டு வேலைகளுக்கு மட்டுமே தகுதியானவர்கள்.... என்ற பல்விதமான அட்டவணைகளுக்குள் அடக்கப்பட்டு, தாம் வலிமையற்றவர்கள்தான் என்ற ஒரு மாயையில் மதிமயங்கிக் கிடந்த பெண்கள், அப்போதுதான் தமது வலிமையை உணர்ந்து விழித்துக் கொண்டார்கள்.

ஆனாலும் அவர்களுக்கான வேலை நேரம், ஊதியம், சம உரிமை போன்ற விடயங்களில் பேதம் காட்டப்பட்டது. இதன் விளைவாக கிளர்ந் தெழுந்த அமெரிக்கத் தொழிலாளப் பெண்கள் 10 மணி நேர வேலை கேட்டும் ஆண்களுக்குச் சமமான ஊதியம் கேட்டும் 1857 மார்ச் 8ந் திகதி புடவை ஆலைப் பெண்களின் முன்நடாத்தலில், ஒரு போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

இப்போராட்டம் முதலாளித்துவ வர்க்க ஆட்சிக் குள் அடக்கப்பட்டுப் போனாலும் 1907 இல் மீண்டும் தோற்றம் பெற்றது.

அதன் தொடர்ச்சியாக இரண்டாவது மகாநாடு 1910 இல் டென்மார்க்கில் கோப்பன்காகன் நகரில் நடைபெற்றது. இதில் 17 நாடுகளைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட சோசலிசப் பெண்கள் கலந்து கொண்டார்கள். இதன் போதுதான் யேர்மனியின் பொதுவுடமைக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிளாரே செற்கினேயினால் மார்ச் 8 ந் திகதி பெண்கள் தினமாக பிரகடனப்படுத்தப் கிளாரே செற்கினே அவர்களின் கோரிக்கையின் பயனாக முதன் முதலாக 1911 ம் ஆண்டு மார்ச் மாதம் 8ந் திகதி சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப் பட்டது. ஆனாலும் அது உத்தியோக பூர்வமானதாக இருக்கவில்லை. **இது குறித்து 1917 மார்ச் 8ந் திகதி ரஷ்யாவில் உள்ள சென்பீற்றர்ஸ் நகரில் ஒரு போராட்டம் நடாத்தப்பட்டது.**




இப் போராட்டத்தில் அலெக்ஸ்சாண்ட்ரா கொ லன்றா என்ற ரஸ்யப் பெண்ணிலைவாதியும் கலந்து கொண்டார்.

இப்போராட்டத்தையடுத்து 1921 ம் ஆண்டு மார்ச் 8ந் திகதியே சர்வதேச பெண்கள் தினமாக உத்தியோக பூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து மார்ச் 8ந் திகதி சர்வதேசப் பெண்கள் தினமாகக் அனுடிக்கப் பட்டு சம உரிமைகளுக்கான பெண்களது போராட்டம் தொடர்கிறது.

இருந்தும் என்ன...?
இத்தனை வருடங்கள் போயும் என்ன...?
கொம்பியூட்டர் யுகம் வந்துமென்ன...?
ஆணாதிக்கப் பண்பாட்டில் பெண் என்பவள் ஆணின் உடைமை என்பது மறுக்கப்பட்டு விட்டதா...?
இல்லையே !
பெண் என்பவள் உற்பத்தி மெசின் என்பது மறுக்கப்பட்டு விட்டதா...?
இல்லையே!
இப்படி இன்னும் எத்தனை
இல்லைகள்!
இந்தப் பெண்
என்பவள் தனக்கே
தான் சொந்தமாக
இருக்கிறாளா...?
அது கூட இல்லையே!

**அவள் எதை உடுக்க வேண்டும்,**
**எப்படி வாழ வேண்டும்,**
**எப்படிச் சிரிக்க வேண்டும்,**
**எதைப் படிக்க வேண்டும்,**
**யாருடைய குழந்தையை**
**எந்த முறையில் தனக்குள்**
**சுமக்க வேண்டும், இவையெல்லாமே**
**மற்றவர்களால்தான் தீர்மானிக் கப்படுகின்றன.**

அது மட்டுமன்றி இவைகளெல்லாம் மற்றவர் களுடைய சர்ச்சச்சைக்குரிய விடயங்களாகவுமே கருதவும் படுகின்றன.

பெண்ணுக்கு விடுதலை கிடைத்து விட்டது என்று ஆங்காங்கு கூக்குரல்கள் கேட்கிறதுதான். ஆனாலும் இன்னும் முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. எமது பெண்களில் அனேக மானோர் நினைக்கிறார்கள் வேலைக்குப் போகவும், சொப்பிங் செய்யவும் கணவனிடமிருந்து அனுமதி கிடைத்து விட்டால் அதுதான் பெண் விடுதலை என்று. இந்த அறியாமை மாற வேண்டும். பெண் விடுதலை என்பதன் பொருளை இவர்கள் சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டும். பெண் விடுதலை என்பது, சமஉரிமை, வேலை நேரம், சம்பளம், தொழில் வாய்ப்பில் பாரபட்சமின்மை... இவைகளில் தொடங்கி சமையலறை, படுக்கை யறை, மனஉணர்வுகள்.... வரையிலான அனைத் தையும் உள்ளடக்கிய ஒரு விடயம் என்பதை முதலில் பெண்களே புரிந்து கொள்ள வேண்டும். அடுத்து அதை அவர்கள் அவர்களை அண்டியுள்ள ஆண்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

அப்போதுதான் பெண் விடுதலையின் தார்ப்பரியம் பற்றி சமூக ரீதியானதொரு புரிந்துணர்வு ஏற்படும்.

பெண் விடுதலை உலகளாவிய ரீதியாகக் கிடைக்க வேண்டும். பெண் சுயமாக இயங்கச் சுதந்திரம் கிடைக்க வேண்டும்.

பெண் இப்படித்தான் வாழ வேண்டுமென்று வீட்டுக்குள் நடைமுறுத்தப்படும் எழுதாத சட்டங்கள் அழித் தொழிக்கப்பட வேண்டும்.

பெண்ணை இறுகப் பற்றியிருக்கும் கண்ணுக்குத் தெரியாத, ஆனால் பெண்ணின் உயிரையும் உள்ளத்தையும் வதைக்கின்ற அத்தனை விலங்கு களும் உடைத் தெறியப்பட வேண்டும்.

**நாம் நாமாக வாழாது**
**நரகத்துழன்று**
**ஊருக்காய் வாழ்வது**
**வீணல்லவா**
**பெண்ணே!**
**ஊருக்காய் வாழாதே! உனக்காய் வாழ்.**

**இரத்தினம் ஜோதிட நிலையம்**
- சோஸ்ற்-



பரம்பரை பரம்பரையாகக் காப்பாற்றி வந்த சோதிடக்கலையின் நுட்பமான கணிப்பின்மூலம் உங்கள் குழந்தையின் ஜனன ஜாதகம் எழுத ருது, ஜாதகம் எழுத, திருமணப் பொருத்தம் பார்க்க இருக்கும் ஜாதகத்தின் பலன் அறிய, நன்மை தீமைகளை அறிந்துகொள்ள, பொருத்தமான காலமறிந்து முன்னேற்றமான வேலைகளை ஆரம்பிக்க....... தொடர்பு கொள்ளுங்கள்:

சோதிட வல்லுனர்
சந்திரசேகரம் கனகரெத்தினம் (Dip.A.G)
எங்கள் புதிய இலக்கம்:
Tel: 02921-3690003

S.Kanagaratnam
Hafer Winkel-3
59494 Soest-Germany..

**சிவகாமி மணவறைச் சோடினை**



திருமணம், பூப்புனிதநீராட்டு வைபவம், இவற்றை அலங்கரிக்கும் அலங்கார மணவறைகள் மற்றும் பிறந்தநாள் பலூன் சோடனைகள் இவை அனைத்திற்கும் இன்றே நாடுங்கள்:






யோகன், யோகி:
02823/6838
Handy: 152 138 22 351

# ’சகிப்புத்தன்மை“ முதியோர் இளையோருக்கு வாழ்ந்துகாட்டும் வாழ்க்கைப்பாடம்!

## தேவை உணர்ந்து தானே செய்யும் நிலை இன்றைய சூழலில் குடும்பங்களில் இல்லை!




மூத்தவர்களே! இளையவர்களாகிய எங்களை வளர்த்து ஆளாக்கியயவர்களே!
சின்னஞ்சிறு விதையாக விழுந்த நீங்கள் இன்று முதிர்ந்த சுவையும்,பயனும் தரும் கனியாகி யுள்ளீர்கள்.

முதுமை ஒரு சாபம், சுமை என்று எல்லாம் கருதவேண்டாம். நேற்றைய நல்ல நினைவுகளில் மகிழவும், இன்றைய நிகழ்வுகளை நிறைவுடன் ஏற்கவும். நாளைய தினத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவும் நீங்கள் பக்குவப்படுங்கள்.

உங்கள் சிரிப்பு உங்கள் சலிப்பை மட்டுமல்ல எங்கள் சலிப்பையும் போக்கும். சோர்வை மறந்து சுறுசுறுப்பாகக் காட்சியளியுங்கள். தனிமையை ஏற்கவும் ரசிக்கவும், பயனுள்ளதாக்கவும் முய லுங்கள்.

உங்கள் வீட்டுக் குழந்தைகள் உங்களை நேசிக்க வேண்டுமா? அவர்களுக்கு ஒரு கதை கூறுங்கள். இளைஞர்களுக்கு உங்கள் அனுபவப் பின்னணி யைச் சுவையாக எடுத்துரையுங்கள்.
ஒவ்வொரு மனிதனும் ஒரு சரித்திரம்தான். அவர்கள் சாதிப்பதுண்டு. உயர் விழுமியங்களை உங்களிடம் இருந்து உங்கள் வாரிசுகள் கற்க வழிகாட்டுங்கள். விபரீத கற்பனைகளும், எதிர்மறைச் சிந்தனை களும் அமைதியையும் தூக்கத்தையும் கெடுக்கம். அவற்றைத் தவிர்த்து நேர்முகச் சிந்தனையும் தன்னம்பிக்கையும் பெருக்கிக்கொள்ளுங்கள்.

வீட்டிற்குள்ளேயே முடங்கிக்கிடக்காதீர்கள். காலை மாலை காற்றாட நடந்து செல்லுங்கள். உங்கள் வயதை ஒத்தவர்களுடன் பேசி மகிழுங்கள்.

60 வயதில் பணி ஓய்வு பெறுவது பணிக்கு மட்டும்தான். 80 வயதிலும் உங்கள் திறமையால் அடுத்தவருக்கு உதவலாம். உங்களை நீங்கள் முழுமையான ஈடுபாட்டுடன் வைத்துக் கொள்ள லாம்.
உங்களைவிட வயது முதிர்ந்தவர்களுக்கு நம்பிக்கையூட்டி உற்சாகப் படுத்துங்கள்.
வீட்டில் உண்டாகும் சின்னச் சின்ன முரண்பாடு களை சுமூகமாக தீர்த்து ஒற்றுமையுண்டாக்கும் இணைப்புப் பாலமாகவே இருங்கள்.

சகிப்புத்தன்மையையும், பொறுமையையும் நல்ல எண்ணங்களையும் குடும்பத்தினர் உங்களிடம் இருந்து கற்கட்டும்.

அமைதியும் கம்பீரமும் முதுமை அழகிற்கு அழகு சேர்க்கும் என்பதை உறுதிப்படுத்துங்கள்.
சகிப்புத்தன்மை முதியோர் இளையோருக்கு வாழ்ந்துகாட்டும் வாழ்க்கைப் பாடம்.
உங்களைவிட வயதுகுறைந்த நண்பர்களுடன் சில மணிநேரம் செலவிடுங்கள். மனதிற்குச் சிறந்த காயகல்பம்.

குடும்ப உறவினர்களுக்கு சிறு சிறு உதவிகள் ஒத்தாசைகள் செய்து கொடுத்து உங்களுடைய தேவைகளை உணர்ந்து அங்கீகரிக்கச் செய் யுங்கள். சுயபச்சாதாபம் முதுமையின் எதிரி. அதனை விரட்டுங்கள்.
குடும்பத்தினரின் குறைகளை அவர்கள் மனம் புண்படாதபடி அவர்கள் ஏற்றுத் திருத்திக் கொள்ளும் விதமாகக் கூறுங்கள்.

உங்கள் உணர்ச்சிகளை தேவைகளை மனம்விட்டு வெளிப்படையாகக் கூறுங்கள். தேவை உணர்ந்து தானே செய்யும் நிலை இன்றைய இன்றைய சூழலில் குடும்பங்களில் இல்லை என்ற நிதர்சன மான உண்மையை ஏற்றுக் கொள்ளுங்கள்.

குடும்பத்தில் இளையவர்கள் பொறுப்பெடுத்துச் செய்ய அனுமதியுங்கள். உங்களது அறிவுரையும் வாழ்க்கைமுறையும் முரண்பாடு இன்றி இருக்கும் விதமாக உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்குங்கள்.

நீங்கள் எதிர்பார்க்கும் கவனம் உங்கள் குடும்ப உறுப்பினரிடம் கிடைக்கவில்லை என்றால். அவர்கள் உங்களை ஒதுக்குவதாக கற்பனை செய்து கொண்டு விலகி ஒதுங்காதீர்கள்.

உங்களது பிரச்சினையை பெரிதுபடுத்தினால் பிறரது பிரச்சினைகளை குறைத்து மதிப்பிட நேரிடும் சிறு விஷயங்களிலும் திருப்தி கொள் வதால் மனதளவில் இளமையாக இருப்பீர்கள்.

முதுமை ஒவ்வொரு வீட்டிற்கும் காவல் தெய்வம். மூத்தோர் சொல் முன்னால் கசக்கும் பினர் இனிக்கும். நல்லவற்றைச் சொல்லத் தயங்கா தீர்கள். உங்கள் வாழ்க்கையை நீங்களே தவறவிட்டாலன்றி பிறரால் பறிக்கமுடியாது.

வீணாகும் பொருள் களைக் கொண்டு அழகிய பயனுள்ள கைவினைப் பொருள்கள் செய்ய முடியும் போது நீங்கள் எப்படி பயனற்றுப்போக முடியும்.?

மகிழ்ச்சியற்ற போதெல்லாம் உங்களுக்கு கிடைக்காததைவிட கிடைத்ததைப்பற்றி அதிகம் நினைத்துப்பாருங்கள்.

சாவைப்பற்றிக் கவலைப்படுவதைவிட வாழ்வைப் பற்றி நினையுங்கள். இன்றைய நாளை மட்டும் நிறைவாகச் செலவிடுங்கள்.

உங்களுக்குப்பின் உங்கள் சந்ததியினரை நீங்கள் இன்றிச் செயற்பட இயலாதவராக்கிவிடாதீர்கள். அதிகம் பேசுவதை விட அதிகம் கேட்பதற்கு முற்படுங்கள்.

மகிழ்வால் நிரம்பிய உங்கள் வாழ்க்கையை இவ்வுலகைவிட்டு மகிழ்வுடன் விடைபெறும் மனம் பெறப்பிராத்தியுங்கள்.

நீங்கள் யாருக்கும் பாரமல்ல. மாறாகப் பாலம் என மகிழ்ந்து ஈடுபாட்டுடன் வாழ்க்கையை எதிர் கொள்ளுங்கள்.

நீங்கள் வேர்கள் நாங்கள் விழுதுகள். வேர்களுக்கு விழுதுகள் என்றும் நன்றிக்கடன் பட்டதே!

People don't grow old ,only when they cease to grow,they become old. யாரும் முதியவர்கள் இல்லை.

அவர்கள் வளர்வதை நிறுத்திக் கொள்ளும் போதுதான் வயதானவர்களாகிறார்கள். என எமர்சன் கூறியதை நினைவு கொள்ளங்கள்.

நன்றி ஸ்ரீராமகிருஸ்ணவிஜயம் 2007 மலர்.








Dortmund நகரில் 14.09.2013 வெற்றிமணி விழா

# இணையத்தில் அடி எடுத்து வைத்த முதல் இந்திய மொழி தமிழ்!



நம் தமிழ் மொழி குறித்து பெருமிதப்பட வேண்டிய சில தகவல்கள்...

உலகின் பழைய மொழிகள் ஏழு. அதில் இப்போதும் வழக்கில் இருக்கும் மொழிகள் மூன்றுதான். அதில் ஒன்று தமிழ்.

இடமிருந்து வலமாக எழுதப்படும் மொழிகளில் பழைய மொழி தமிழ் மட்டும்தான். அதாவது தமிழ் எப்படி எழுதப்பட்டதோ, அதே போல்தான் இன்று உலகின் பல மொழிகள் எழுதப்படுகின்றன.

இந்தியாவில் கிடைத்துள்ள ஏறத்தாழ 1,00,000 கல்வெட்டுப் பதிவுகளில் அறுபதாயிரத்திற்கும் அதிகமானவை தமிழில் உள்ளன. மற்ற மொழிகள் அனைத்தும் ஐந்து விழுக்காட்டுக்கும் குறைவான கல்வெட்டுகளையே கொண்டுள்ளன.

தமிழ் பிராமியில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் எகிப்து, தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளில் கிடைத்துள்ளன. இவற்றின் வயது கி.மு.300. அதாவது 2300 ஆண்டுகளுக்கு முன்னரும் தமிழ் இருந்திருக்கிறது.

திருக்குறள் 2000 ஆண்டுகளுக்கும் முந்தையது. ஆனால், அதில் உள்ள சொற்களை நாம் இப்போதும் பயன்படுத்தி வருகிறோம். உதாரணம்:
'எப்பொருள் யார்யார்வாக் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'
'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்'

தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தி எண்களும் எழுதப்பட்டன.

கோடிக்கு மேல் குறிப்பிடுவதானால், ஆங்கிலத்தில் பத்து கோடி, நூறு கோடி என்றுதான் எழுத வேண்டும். அவற்றிற்கென தனிச் சொற்கள் கிடையாது. ஆனால், தமிழில் உண்டு. கோடி கோடி என்பதை பிரமகற்பம் என்ற ஒரு சொல்லில் எழுதிவிடலாம். அதேபோல பின்னத்தில் 320ல் ஒரு பங்கைக் குறிப்பது வரை ஒரு சொல்லில் குறிப்பிட முடியும் (முந்திரி).
தன்னிலிருந்து மலர்ந்து வரும் ஒலி என்பதைக் குறிப்பிடும் தம்-இழ் என்ற சொல்லே தமிழ் என ஆயிற்று என்றும், தகுதியான பேச்சு முறை என்பதைக் குறிக்கும் தம் -மிழ் என்ற சொல்லே தமிழ் என ஆயிற்று எனவும் செக் நாட்டு அறிஞர் கமில் சுலவெபில் கருதுகிறார்.

வன்மையான ஓசை உடைய எழுத்துக்கள், மென்மையான ஓசை உடைய எழுத்துக்கள், இரண்டிற்கும் இடைப்பட்ட ஓசை உடையவை என்பதை உணர்த்தும் வகையில் தமிழின் மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலிருந்தும் ஓர் எழுத்தை எடுத்து (த-வல்லினம், மி- மெல்லினம், ழ்- இடையினம்), தமிழ் என மொழிக்குப் பெயரிடப்பட்டுள்ளது. உலகில் பெயரைக் கொண்டே மொழியின் தன்மையை அறியும் பெயர் வேறு எந்த மொழிக்கும் கிடையாது.

இணையத்தில் அடி எடுத்து வைத்த முதல் இந்திய மொழி தமிழ்.

உலகில் நான்கு நாடுகளில் தமிழ் அரசின் அலுவல் மொழியாக இருக்கிறது

## தனியாக இருக்கும் போது மாரடைப்பு வந்தால் உங்களை நீங்களே எப்படி காப்பாற்றிக்கொள்வது..?

துரதிஷ்ட வசமாக மாரடைப்பு ஏற்படும் போதெல்லாம் இறப்பவர்கள் அதிகமாக தனியாக இருந்திருப்பவராக உள்ளனர்..! உங்கள் இதயம் தாறுமாறாக துடிக்கிறது.. நீங்கள் சுயநினைவை இழக்க வெறும் 10 நொடிகள் தான் உள்ளது. இப்போது நீங்கள் செய்ய வேண்டியது தொடர்ச்சியாக மிக ஆக்ரோஷமாக இரும்ப வேண்டும், ஒவ்வொரு முறை இருமுவதற்கு முன்னரும் மூச்சை இழுத்து விட வேண்டும், இருமல் மிக ஆழமானதாக இருக்க வேண்டும்...

இருதயம் இயல்பு நிலை திரும்பும் வரையிலோ அல்லது வேறொருவர் உதவிக்கு வரும் வரையிலோ ஒவ்வொரு இரண்டு நொடிக்கும் மூச்சை இழுத்து விட்டு இருமிக்கொண்டே இருக்க வேண்டும். மூச்சை இழுத்து விடுவதினால் நுரை ஈரலுக்கு ஒக்சிஜன் சீராக செல்ல வழி வகுக்கிறது,



இருமுவதால் இருதயம் நிற்பதில் இருந்து தொடர்ச்சியாக துடித்துக்கொண்டே இருக்க உதவும், இதனால் ரத்தஓட்டம் சீரடையும்...
இருமுவதால் ஏற்படும் அதிர்வினால் இதயம் சீராக துடிக்கும்.. பின்னர் இருதயம் சீரடைந்ததும் அருகில் உள்ள மருத்துவமனைக்கு செல்லலாம்...

**இந்த தகவலை உங்கள் நண்பர்களிடம் பகிருங்கள்...**




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Dortmund நகரில் 14.09.2013 வெற்றிமணி விழா




# காலில் கல் அடிக்க அதிஷ்டம் அடித்தது!

கனக்ஸ்

இங்கிலாந்தின் கடற்கரை ஒன்றில் தனது நாயுடன் உலவப் போன மனிதனின் காலில் ஒரு கல் மோதியது. கானகத்தில் இராமனின் காலில் மோதிய கல் கட்டழகுக் காரிகையாக எழுந்தது என்கிறது இராம காவியம்.

இலண்டன் கடற் கரையில் கென் வில்மன் என்ற இங்கிலாந்துக்காரரின் காலில் மோதிய கல் அவரை இலட்சாதிபதியாக்கி உள்ளது என்கிறது இணையத் தகவல். புராணத்தில் கல் தேன்றியதோ முனிவரின் சாபத்தின் விளைவு. இந்தக் கல்லோ திமிங்கிலம் ஒன்று எடுத்த சத்தியின் பெறுபேறு. முனிவருடன் சென்ற போது அவர் கூறிவந்த கதையில் கவனம் செலுத்தியதால் இராமன் கல்மேல் தடக்கினான், இந்த மனிதனோ தனது நாயுடன் சென்றமையால் கவனம் எல்லாம் அதன் மேல் இருக்க கல் காலில் தட்டியபோது தான் உணர்வு வந்தது. கல் தெரிந்தது.

பெரிய கல் 15 கில்லோ கிறாம் நிறையுடைய கல். அது சரி. இந்தக் கல்லின் பெறுமதி என்ன தெரியுமா? உடனடியாக அதன் பயன் தெரிவோர் தருவதாகச் சொன்ன பணம் 50,00 இயூறோ ( $65- 625) ஆனால் வேகமாக அதன் பெறுமதி உயர்ந்து கொண்டு போகிறது. $150-000 வரை போகும் என எதிர் பார்க்கிறார்கள். எதற்காக இந்த விலை? கண்டெடுக்கப் பட்ட சமயத்தில் அதன் மணம் குதிரைச் சாணியின் மணமாம். சகிக்க முடியாத மணம் தான்.

ஆனால் அதன் துர் நாற்றத்தைப் பெரிது படுத்தாமல் சில வருடங்கள் அதனை அப்படியே வைத்திருந்தால் அதன் மணம் சிறிது சிறிதாக மாறி அற்புதமான மணம் தரும் பொருளாகி விடும். வாசனைத் திரவியங்கள் ( Chanel No.5) அத்தனைக்கும் இது தான் வாசனையைக் கொடுக்கும் பிரதான கூறாகும் என்கிறார்கள் விஷயம் புரிந்தவர்கள். Ambergris என அழைக்கப் படும் இந்தக் கல், திமிங்கிலத்தின் சத்தி.·. வாந்தியின் பெறுபேறு. கடலிலே வாழ்கின்ற திமிங்கிலம் கடலிலே வாழ்கின்ற மிருகங்களை பலவற்றினை உணவாகக் கொள்ளும் மிகப் பெரிய விலங்கு. அவற்றினில் பலவற்றுக்குக் கூரிய முட்கள் இருக்கலாம். ஆகவே திமிங்கலம் தனது இரைப்பையினதும் குடலினதும் சுவரினை இந்த முட்கள் பாதிக்காமல் இருப்பதற்காகச் சுரக்கும் சுரத்தலே திரண்டு ஒரு மீள் சக்தியுடைய குறை திண்மப் பொருளாக மாறுகிறது. நாளாவட்டத்தில் அது பெரிதாகி இரைப்பையின் பெரும் பாகத்தை நிரப்பிக் கொள்வதால் அதனை திமிங்கிலம் வெளியேற்றுகிறது, வெளியோற்றுவதற்கு இரண்டே வழிகள் உள்ளன. அந்தப் பொருள் சிறிதாக இருக்குமாயின் குதமூலமாக வெளியேற்றலாம் பெரிதாக இருக்குமாயின் குதவாயிலூடாக வெளியேற்றுதல் சாத்திய மில்லையாதலால் வாய்மூலமாகச் சத்தி எடுத்து விடுகிறது. வெளியே வருகின்ற வஸ்து ஆரம்பத்தில் மென்மையானதாகவும் மீள்சக்தியுடைய தாகவும் கடல் நீரில் மிதக்கின்றது. போகப் போகக் கடினமாகிக் கொண்டு வருகிறது. கடலில் மிதக்கும் இந்த அம்பேர்கிறிஸ் அலையால் அடித்துக்கொண்டு செல்லப் பட்டு கரையில் கல்லாகிக் கிடக்கிறது. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமோ என்பார்கள். கடற்கரைக் கல் எல்லாம் அம்பேர்கிறிஸ் கல்லாகுமா? எதற்கும் ஒருகொடுப்பனவு வேணும். எதற்கும் கடற்கரையில் உலாவும் போது நிலத்தைப் பார்த்தபடி நடவுங்கள்.



12வது ஆண்டு நினைவாஞ்சலி!

செல்வி கஜனி தேவராஜா
(பிறேமன், ஜெர்மனி)

ஆண்டுகள் பன்னிரண்டு
பறந்து சென்றாலும்
ஒட்டிய உறவு
மாறாது
உன் நினைவுகள்
என்றும்
தூங்காது

நீங்காத நினைவுடன்,

அப்பா அம்மா அக்கா அத்தான் மற்றும்
உறவினர், நண்பர்கள்.
S.Thevarajah (U.K.)

மலர்வு: 12.05.1988
பிரிவு: 16.03.2001


ஸ்ரீ கருமாரியம்மன் ஜோதிடம்
உலகப்புகழ்பெற்ற ஜோதிடர் இந்திய பாரம்பரியத்திலிருந்து



பண்டிதர் நாராயண சுவாமி

இந்தியவிலிருந்து வருகை தந்துள்ள பண்டிதர் நாராயண சுவாமி உங்களின் துள்ளியமான கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம், கைரேகை போன்ற விபரங்கள் மற்றும், தாயத்துக்கள் சத்கர ஸ்தாபனங்கள் வழங்கப்படும். சலகல விதமான பில்லி, சுனியங்களில் இருந்து விடுதலை பெற்றுத் தரப்படும். மோகினிப்பேய், இப்படி ஏராளமான வேதனைகளுக்கு தீர்வு தரப்படும். அன்பர்களே! உங்கள் எல்லாவிதமான பிரச்சனைகள் தீர, ஒரு முறை எங்களை நாடுங்கள். தொர்பு கொள்ளுங்கள்:

**உங்களுக்கு இது போன்ற**
**ஏதாவது பிரச்சனைகள் உள்ளதா?**
உடல்நலம்,திருமணயோகம்,
வாஸ்த்து வாஸ்திரம், பெயர்வசிகம்,
காதல்வசிகம், தொழில்வசிகம்,
கணவன் மனைவி,
திருமணம்,தொழில்முடக்கம் வியாபாரம்
உத்தியோகம்,குழந்தை பாக்கியம்,கண்திருஸ்டி,நீதிமன்ற
வழக்குள்,தோசங்களுக்கு பரிகாரம்.

Tel:0152 149 361 21
0151 634 847 89

Adler Str.33
44137 Dotmund



யேர்மனியில் Düsseldorf நகரில் இருந்து

சுவை பாட்டி சேவை

உங்கள் வீட்டு மங்கல வைபவங்களுக்கு சுவையாக உணவு செய்து தரக் காத்திருக் கின்றோம். கொத்துரொட்டி, இடியப்பம், என நீங்கள் விரும்பும் உணவுகள் 1000 பேர் என்றாலும் வந்து பரிமாறுவோம்.
மேலும் குறைந்த அளவு உணவு உடன் தேவை என்றால் 2 மணிநேரத்திற்கு முன் ஓடர் செய்தால் உடன் சுடச்சுட செய்து தரப்படும்.



தொடர்பு கொள்ள...

0211 167 577 89 ,0211 688 5 9 67
Handy: 0163 690 8151



Lucky Fly
www.golden-travels.de

669€
750€

Summer-Offer 2013
Frankfurt-Colombo

இன்றே! பதிவுசெய்யுங்கள் 27.07.2013 இருந்து
பயணம் செய்ய, பயணச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளலாம்.
குறைந்தளவு விமானச்சீட்டுக்கள் கையிருப்பில்.



(Lotto Toto)
Allee Str.38-40 A
44793 Bochum
Tel: 0234- 23 99 032
0179- 1 48 48 92
S.Siva
Kaufmann

# சுவாமி விவேகானந்தரின் போதனைகள் ஓர் சர்வதேச வன்முறை நிவாரணி!



சேவியர்

சுவாமி விவேகானந்தரை அறியாதவர்கள் உலக அளவிலேயே மிகக் குறைவாகத் தான் இருப்பார்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த அளவுக்கு உலகின் பல எல்லைகளையும் வசீகரித்த சிந்தனைகள் அவருடையது.

மனுக்குலத்தின் மிகப்பெரிய பலம் நமக்கு ஏராளமான தத்துவ ஞானிகளும், ஆன்மீக வாதிகளும், சிந்தனையாளர்களும் கிடைத் திருப்பது தான். நமது மிகப்பெரிய துரதிஷ்டம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மத அடையாளத் துக்குள் அடைக்கப்பட்டு விட்டது தான்.
பாட்டிலுக்குள் அடைக்கப்பட அலாவுதீன் பூதம் போல இருக்கும் இந்த சிந்தனைவாதிகளை உரசிப் பயன்படுத்த பிற மதத்திலுள்ளவர்கள் தயங்குவதும், அச்சப்படுவதும் வெகு சாதாரணம்.
தாழ்மையையும், அன்பையும், மனித நேயத் தையும் போதித்தவர் இயேசு. "என்னைப் பின் செல்லுங்கள்" எனும் வார்த்தையின் மூலம் அவருடைய செயல்களையும், வாழ்க் கையையும் அப்படியே பின்பற்ற அழைப்பு விடுத்தார். அவரை கிறிஸ்தவம் எனும் மதத்திற்குள் அடைத்து வைத்ததனால் தனிமைப்படுத்தப் பட்டு விட்டார்.
வாழ்க்கையை ஆனந்தமாய் வாழ வியப்பூட்டும் சிந்தனைகள் சொன்ன புத்தர் இன்னொரு மதத்துக்குள் பூட்டப்பட்டு விட்டார். அதே நிலை தான் விவேகானந்தருக்கும். அற்புதமான தத்து வங்களும், வாழ்வியல் வழிகளும், நிர்வாகப் பார்வைகளும் கொண்ட விவேகானந் தரும் மத அடையாளத்துக்கு உள்ளே தான் அடைக்கப் பட்டிருக்கிறார்.
அந்த மத அடையாளங்களைத் தாண்டி அவர்கள் சொன்ன சிந்தனைகளை அறிந்து கொள்வதும், அவற்றை வாழ்க்கையின் பாதையில் பயன்படுத்தி முன்னேறுவதுமே நம்மிடமிருந்து அந்த மகான்கள் எதிர்பார்க்கும் விஷயம்.

**நாம் பெரும்பாலும் மகான்களை பூஜித்து விட்டு, அவர்களுடைய சிந்தனை களுக்கு பூஜ்யம் மரியாதை மட்டுமே கொடுக்கிறோம். மகான்கள் வழிபாட்டுக்கு உரியவர்களல்ல, அவர்கள் வழிகாட்டுதலுக்கு உரியவர்கள் எனும் உண்மையை நாம் உணர்தல் நமது முதல் தேவை.**

விவேகானந்தருக்கு இருந்த சிந்தனைத் தெளிவும்இ அறிவுக் கூர்மையும், நிர்வாகச் சிந்தனையும் மிகவும் வியப்புக்கு உரியது. நிறைகுடம் தழும்பாது எனும் கூற்றுப் படி அவர் பிற மதங்களை பாராட்டவும் வாழ்த்தவும் தயங்கவே இல்லை. வெளிப்படையாகவே அவர் புத்தமதத்தின் கோட்பாடுகளின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.
இயேசுவின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டி ருந்தார். இயேசுவைப் போல ஆகவேண்டும், இயேசுவை இமிடேட் செய்வதல்ல, அவராகவே மாறவேண்டும். அதையே நான் விரும்புகிறேன். அவர் காலத்தில் நான் இருந்திருந்தால் அவருடைய பாதங்களைக் கழுவியிருப்பேன், கண்ணீரினால் அல்ல, இதயத்திலிருந்து வடியும் இரத்தத்தினால். என அதீத ஈடுபாட்டை வெளிப்படுத்தவும் அவர் தயங்கவில்லை.
சாதாரண வாழ்க்கையை விட்டு விட்டு ஆன்மீக வாழ்க்கையைத் தேடிபோன போது விவே கானந்தர் கையில் இரண்டு புத்தகங்கள் இருந்தன. அவையே அவருடைய ஆன்மீக வாழ்க்கைக்கான அடித்தளத்தைக் கொடுத்தன. ஒன்று பகவத் கீதை, இன்னொன்று த இமிடேஷன் ஆ.்.ப் கிரைஸ்ட் (இயேசு கிறிஸ்துவின் பிம்பம் ). !
மதங்களுக்கு இடையேயான பகைமை உணர்ச்சியும், வெறுப்பு உணர்ச்சியும் வாழ்க் கையை செம்மையாகவும், வளமையாகவும் கொண்டு செல்லாது என்பதையே அவருடைய வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது.
1863ம் ஆண்டு ஜனவரி 12ல் கல்கத்தாவில் பிறந்த விவேகானந்தர் 1902ம் ஆண்டு ஜூலை 4ம் ஆண்டு இயற்கை எய்தினார். இது அவருடைய 150வது நினைவு ஆண்டு ! அவரை நினைவுகூரும் இந்த ஆண்டில் அவரை ஒரு வழிபாட்டு மகானாகப் பார்க்காமல் ஒளிகாட்டும் மகானாகப் பார்ப்பதே தேவையானது !
எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதில் முழுக்க முழுக்க உனது கவனத்தைச் செலுத்து. அதுவே உனக்கு வெற்றியைத் தரும் என்று ஒரு முறை அமெரிக்காவில் சிறுவர்களிடம் விவேகானந்தர் கூறினார். பறவையின் கண்ணைப் பார்த்து அம்பு எய்த அர்ஜுனரைப் போல, முழு கவனத்தையும் ஒரு விஷயத்தில் வைத்தால் வெற்றி பெறலாம் எனும் அவருடைய சிந்தனை மிகவும் வலுவானது !
அதே சிந்தனையை இன்னும் வலுவூட்டி நமக்கு ஒரு மிகப்பெரிய வாழ்வியல் போதனையாய் தருகிறார். இந்த ஒரே ஒரு விஷயத்தை மனதில் கொண்டாலே அலுவல் வெற்றிகள் நம்மைத் தேடி வருவது சர்வ நிச்சயம் ! உண்மையில் வெற்றி யாளர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பார்த்தால் அவர்கள் இந்த ஒரு சிந்தனையின் அடிப்படை யிலேயே இயங்கியிருக்கும் உண் மை விளங்கும். விவேகானந்தர் சொன்னது இது தான்.

"ஒரே ஒரு லட்சியத்தை எடுத்துக் கொள். அதுவே உனது வாழ்க்கை எனக் கொள். அதைக் குறித்து மட்டுமே சிந்தித்துக் கொண்டிரு. அதைக் குறித்து மட்டுமே கனவுகளைக் காண். உனது நாடி, நரம்பு, இரத்தம், சதை, மூளை, உடலிலுள்ள ஒவ்வொரு பாகத்திலும் அந்த இலட்சியத்தை நிரப்பிவை. மற்ற எல்லா சிந்தனைகள் எண்ணங்களை விலக்கி விடு. இதுவே வெற்றிக்கான மந்திரம்"
ஒரே ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டு அதில் சிறந்து விளங்கும் 'சிஸ்டம் மேட்டர் எக்ஸ்பர்ட்' ஐடியாவே இது. உங்களுக்குப் பிடித்த எந்த ஒரு சாதனையாளரையும் எடுத்துக் கொள்ளுங்கள். அவருடைய வாழ்க் கையை அலசுங்கள். இந்த சிந்தனை அங்கே செயல்பட்டிருப்பதைப் பார்க்க முடியும் !

தன்னம்பிக்கையின் அத்தனை அம்சங்களையும் விவேகானந்தரின் வார்த்தைகளில் காணலாம். அதே போல தன்னம்பிக்கைப் பாடம் அவருடைய போதனைகளில் சரளமாய் வழிவதையும் நாம் எப்போதும் காண முடியும். "உன்னையே நீ நம்பாமல் உன்னால் கடவுளை நம்ப முடியாது" எனும் புதிய போதனையை விவேகானந்தர் மட்டுமே சொல்ல முடியும்.

தொடர்ச்சி 14ம் பக்கம்





Om Namaste
Tel:0231 530 644 74
டோர்ட்முண்ட் நகரில் .....
நீங்கள் மட்டுமல்ல உங்கள் விருந்தினர்களுடனும்
ஆற அமர இருந்து அறுசுவை உணவை
உருசித்து மகிழ இதோ! ஓர் இடம்!
ஓம் நமஸ்த்தே!
Mittags Buffet
All you can eat!
only 6,00 €
(11.00-15.00)
Inhaber: S.Sivakumaran
Tel: 0176 49 75 7406
Om Namaste
Rheinische Str.55
44137 Dortmund
Öffnungszeiten
Di-Fr 11.00-15.30
Di-Fr 17.00-23.00
Sa,So Und Feiertage
11.00-23.00
Montag Ruhetag
பிறந்தநாள் விருந்து
உபசார நிகழ்வுகள்
எமது உணவகத்தில்
சிறப்பாகச் செய்யலாம்.

Kaneen electronics
10 Years
www.kaneenelectronics.de
புதியதோர் தொழில் நுட்பம்!!!!! புதியதோர் வாய்ப்பு!!.
Full HD,SDமுறையில் அனைத்து நிகழ்வுகளையும் Video-Photo செய்யவும்,சிறந்த முறையில் படத்தொகுப்பு செய்யப்பட்டு, Blue Ray DVD பதிவுக்கும்அனைத்து நிகழ்வுகளை விழா நடக்கும் இடத்தில் இருந்து செய்மதிமூலம் உலகெங்கும் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும் அற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் இவை அனைத்தும் மாதாந்த தவணை முறையில் வங்கியூடாக பெற்றுக் கொள்வ தற்கும்
Schevenhoferweg-24 42111 Wuppertal
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de

13ம் பக்கத் தொடர்ச்சி

தன்னை அழிப்பதன் மூலம் இறையை அடைவதையே வேதங்களும், மதங்களும் போதிக்கின்றன. தன்னை அறிவதன் மூலமும், தன்னை நம்புவதன் மூலமும் கடவுளை நம்பும் புதிய போதனை விவேகானந்தரிடம் இருந்தது ! தன்னிடமும், தன் ஆன்மாவிடமும் இருக்கும் சக்தி அபரிமிதமானது. அதைக் கொண்டு சாதிக்க முடியாத விஷயங்களே இல்லை என்பதையே விவேகானந்தர் அடிக்கடி போதித்தார் !
அதனால் தான் தன்னைக் கூட அவர் ஆசிரியராய்க் கருதவில்லை.

**'நீ உன்னி லிருந்தே உருவாகவேண்டும். உன்னை யாருமே ஆன்மீகவாதி ஆக்க முடியாது. உனக்கு யாரும் கற்றுத்தர முடியாது. உனது ஆன்மாவே உனது ஆசான் ' எனும் அவருடைய போதனைகளின் அடிப்படை தனி மனித தன்னம்பிக்கையைக் கட்டி எழுப்புவதும். ஆழ்மன சக்திகளை அடையாளம் காண்பதும் தான் !**

அதனால் தான் அவருடைய ஆன்மீகம் எல்லைகளைத் தாண்டி உயரமாய் மாறியது. "நான் காணும் மனிதர்களிடமெல்லாம் கடவுளைக் காண்கிறேன். மனித உடல் கடவுள் வாழும் ஆலயம். இந்த உண்மையை நான் உணரும் தருவாயில் கட்டுகள் அறுக்கப்பட்ட சுதந்திர மனிதனாய் உணர்கிறேன்" என்கிறார் விவேகானந்தர்.
சகமனிதனில் இறைவனைக் காண்பவர்கள் மனுக்குலம் முழுதும் மனித நேயம் தவழ வேண்டும் என விரும்புவார்கள். வெறுமனே கற்களால் கட்டிய ஆலயங்களில் மட்டுமே கடவுளைக் காண்பவர்களால் அது முடியாது. அவர்கள் கற்களைப் பாதுகாத்து உயிர்களை அழிக்கத் திரிவார்கள். ஆனால் அது உண்மையான ஆன்மீகம் அல்ல. இதையே விவேகானந்தரின் தேடல் நமக்கு அற்புதமாய் விளக்குகிறது.
பல்வேறு நதிகள் பாய்ந்தாலும் அவை சேரும் இடம் கடல் தான். அதுபோல எத்தனை மத சிந்தனைகள் உருவானாலும் அவை அடையும் இடம் கடவுள் தான். அந்தக் கடவுளை மிகவும் நேசத்துக்கு உரியவராக, எல்லோரையும் விட அதிகமாய் அன்பு செய்ய வேண்டும் என்கிறார் விவேகானந்தர்.
கடவுளையும் அவருடைய வழிகளையும் முதலில் தேடுங்கள்.

மற்ற உலக செல்வங்களெல்லாம் உங்களை வந்து சேரும். நமது முழு மனதையும் இறைவன் பால் செலுத்த வேண்டும். கடலைத் தேடி ஓடும் நதிகளில் அசுத்தங்களும், மலர்களும் கலந்தே இருக்கும். எல்லாமே அடைவது கடலின் மடியில் தான் ! என்னிடம் உண்மையாய் இருப்பது கடவுள். கடவுளில் உண்மையாய் இருப்பது நான், இந்த உண்மை கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயான இடைவெளியை நிரப்புகிறது.

இறைவனை அறிவதன் மூலமாக நமக்குள் இறை அரசு வர வழிவகை செய்கிறோம். எனும் விவேகானந்தரின் தத்துவங்கள் ஆன்மீகத்தின் வெளிச்ச விழுதுகள்.

இன்றைய உலகம் விவேகானந்தரைக் கொண்டாடுகிறது. ஆனால் அவருடைய சிந்தனைகளை வாழ்க்கையில் கொள்வதில்லை. அவரை வெறுமனே வழிபடவோ, அல்லது அவரைக் குறித்துப் பெருமைப்படவோ மட்டுமே உலகம் தயாராய் இருக்கிறது. அவருடைய சிந்தனைகள் மனித இதயங்களில் பாயத் துவங்கினால் வாழ்க்கை நிச்சயம் வசீகரமாய் மாறும் என்பதில் ஐயமில்லை.

அவரே சொல்கிறார். "நீ சுயநலமற்றவனா ? உனக்குச் சுயநலம் இல்லாவிட்டால் நீ எந்த மதப் புத்தகங்களையும் வாசிக்கத் தேவை யில்லை. எந்தப் புனிதத் தலத்துக்கும் செல்லத் தேவையில்லை. நீ மிகச் சரியான வாழ்க்கை வாழ்கிறாய்" !
தன்னலம் அற்றவன் தனது செல்வங்களைப் பகிர்ந்து கொள்கிறான். அதைத் தனக்கென வைத்துக் கொள்வதில்லை. தன்னலம் அற்ற வன் தனது சுகத்துக்காக பாலியல் அத்து மீறல்கள் செய்வதில்லை. ஆசைகளின் கதவைத் திறந்து அநீதிகளுக்கு அழைப்பு விடுப்பதில்லை. அவன் பிறருக்கான வாழ்க்கை வாழ்கிறான். பிறருடைய மகிழ்ச்சி, சந்தோசம், நிறைவு போன்றவையே அவனுடைய மனதை ஆக்கிரமிக்கின்றன.

இப்படிப் பட்ட சுயநலம் அற்ற மனிதர்கள் நிரம்பும் உலகம் அழகாகிவிடுகிறது. அதன் பின்னர் வழிகாட்டுவதற்கு மகான்களும் தேவையில்லை, மதங்களும் தேவையில்லை. தோண்டத் தோண்ட சிந்தனையை விரி வடையச் செய்யும் விவேகானந்தரின் இந்தப் போதனை ஒன்றே போதுமானது சர்வதேச வன்முறை நிவாரணியாக ! இது விவேகானந்தரின் 150வது நினைவு ஆண்டு

வெறும் நினைவு ஆண்டாக இது கடந்து போவதில் எந்த அர்த்தமும் இல்லை ! இந்த ஆண்டு நமது நினைவிலிருந்து அகன்று போகாத ஆண்டாக மாற வேண்டும். அதற்கு விவேகானந்தரின் இந்த சிந்தனை நமக்குள் பதியமிடப்பட்டு வளர வேண்டும். அப்படி நிகழ்ந்தால் மானுடம் மகிழ்வாகும்இ மனிதம் வலுவாகும் !




தரன் விடியோ & போட்டோ

Tel:0208 88 265 73
0177 24 77 449



# பலவீனமாகக் கருதப்பட்ட பலங்கள்

வைத்திய கலாநிதி எழுமதி -




அந்தக் காலத்தில் இருந்து 90 ஆண்டு காலப்பகுதிவரை பெண்ணியம் பற்றிய ஆய்வு நூல்களும், பொதுவான அபிப்பிராயங்களும் பெண்களுக்கு இரண்டாம் இடத்தையே ஒதுக்கியுள்ளன. ஆண்கள் வேலை செய்பவர் களாகவும், பெண்கள் வெறுமனே சமைப்பதும், படுக்கையைப் பகிர்வதும்தான் என்ற ரீதியில் தொடர்ந்து சித்திரிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த நிலைப்பாடு இன்று மாறத் தொடங்கியுள்ளது. கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளது. இன்று பெண்கள் விமானம் ஓட்டுகின்றனர். விண்வெளிக்குச் செல்லுகின்றனர். களத்தில் ஆண்களுக்குச் சரிக்குச் சமனாக நின்று எதிரியை எதிர்த்துச் சமராடுகின்றனர். பெரிய தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கின்றனர். கல்லூரி முதல்வர்களாகவும், வைத்திய நிபுணர்களாகவும், கட்டிட பொறியிலாளர்களாகவும் திகழ்கின்றனர். மேலும் வயலில் ஆண்களுடன் சேர்ந்து வேலையைப் பங்கு போட்டுச் செய்கின்றனர்.

உடலமைப்புரீதியாகவும், உடற்றொழில்ரீதியாகவும் ஒரே வயதுடைய ஆண்பெண் இருபாலாரையும் ஒப்பிட்டுப்பார்க்கும் இடத்தில் உயரம், நிறை, பலம் ஆகியவற்றில், ஆண்கள் பெண்களைவிட கூடியவர்களாகவே உள்ளனர். மேலும் பெண்ணின் வாழ்க்கையில் பிரத்தியேகமாக ஏற்படுகின்ற உடற்றொழிலியல் மாற்றங்களான மாதவிடாய் வருதல், மகப்பேறு அடைதல் ஆகிய விடயங்களையும் பெண்களின் பலவீனங்களாகப் பார்க்கின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களையும் மனதில் நிறுத்திப் பெண்களை 2ம் இடத்தில் நிறுத்தியுள்ளனர். ஆனால் இக்காரணங்கள் அனைத்தும் பெண்களின் பலவீனம் அல்ல. அவை பலம் என்று வாதிடும் காலம் வந்துவிட்டது.. இதற்குப் பல ஆய்வுகளும் உறுதுணையாக நிற்கின்றன.

ஹெலன் பிஸர் ( Hellen Fisher ) என்ற பிரசித்தி பெற்ற அமெரிக்க மனித வர்க்கவியல் நிபுணர் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாகப் பெண் 21ம் நூற்றாண்டின் தலைவியாக வருவாளென்று எதிர்வு கூறுகின்றார். மேலும் அவர் தனது ஆய்வு நூலில் உளவியல் ரீதியாக ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் பல மடங்கு பலம் வாய்ந்தவர்கள் என்றும் அவர்கள் தலைமைப்பதவியை வகிக்கத் தகுதிபெற்றவர்கள் என்றும் கூறுகின்றார். பெண்களின் தலை சிறிதாக இருப்பதனால் மூளையும் ஒப்பீட்டளவில் ஆண்களின் மூளையைவிட சிறிதாக உள்ளது. ஆனால் மூளையினுள் காணப்படுகின்ற நியூரோன்கள் எனப்படும் நரம்புக்கலங்களின் எண்ணிக்கை பெண்களில் கூடுதலாக உள்ளது. மேலும் ஆண்களின் குருதியில் ஈமோகுளோபினின் அளவு கூடுதலாகவும் பெண்களின் குருதியில் இமினோகுளோபினின் அளவு கூடுதலாகவும் உள்ளது. இதனைப் பெண்கள் வீட்டிலும் வெளியிலும் தங்களின் பணியை எதுவித ஓசையுமின்றி செய்து முடிப்பதினை வைத்தே கண்டு கொள்ளலாம்.

1995ம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் ஓர் பரீட்சார்த்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் முன்பு பயிற்சி எதிலும் ஈடுபடாத 41 பெண்கள் (இதில் மாணவிகள், வழக்கறிஞர்கள், வியாபாரநிலைய ஊழியர்கள், ஆறுமாதகாலத்திற்கு முன்பு, மகப்பேறு அடைந்த தாய்மார்கள் போன்றோர் அடங்குகின்றனர்) யாவரும் ஐந்திலிருந்து ஆறுமாதகாலப் பயிற்சியில் 34 கிலோ கிராம் பாரத்தினை தோளில் சுமந்தபடி 3 கிலோமீற்றர் தூரம் ஓடுவதற்கும், 45 கிலோகிராம் எடையைச் சுமந்தபடி நிலத்தில் இருந்து எழும்புவதற்கும் கற்றுக் கொண்டனர். ஆனால் அவர்களைப் போன்ற தரத்தில் உள்ள ஆண்களினால் அப்படி முன்னேற முடியவில்லை என்பதனையும் அப்பரீட்சார்த்த ஆய்வில் கண்டறியப்பட்டது. மேலும் 1964 தொடக்கம் 1995 வரையான காலப்பகுதியில் மரதன் ஓட்டத்தில் பெண்களின் சாதனை விகித உயர்வு 32 வீதமாகவும், ஆண்களின் விகித உயர்வு 4.5 வீதமாகவும் காணப்பட்டது. இதுவும் பெண்களின் பரிணாம வளர்ச்சியின் மாற்றத்தினை எடுத்துக் காட்டும் ஒரு சான்றாகும்.

இவ வாறு ஆய்வுகளும் பரீட்சார்த்த செயற்பாடுகளும், பெண்களின் பலத்தினை வெளிக்கொண்டு வந்திருக்கும் இவ் வேளையில் பெண்களும் பல பரிணாம வளர்ச்சிகளைத் தம் செயற்பாடுகளூடாகக் காட்டிவருகின்றனர். எனினும் இன்றும்கூட எம் மத்தியில் பெண்களைப் பலவீனமானவர்களாகவும், இரண்டாந்தர நிலையிலுள்ளவர்களாகவும் பார்க்கின்ற நிலை காணப்படு கின்றது. இந்த நிலைமாற வேண்டுமாயின் முதலில் பெண்கள் தம்பலத்தினை அறிந்து வைத்திருக்க வேண்டும். அடுத்ததாக என்னென்ன விடயங்களை வைத்துப் பெண்களைப் பலவீனமாக எடை போடுகின்றனர் என்று அறிந்து அவை, ஏன் பலவீனமான விடயங்களாகக் கருதப்பட்டு வந்தன என்பதையும் நோக்க வேண்டும். மேலும் இவ் விடயங்கள் யாவும், இன்று பலமானவையாகச் செயற்படுகின்றன என்ற விஞ்ஞானரீதியான ஆய்வு உண்மையையும் அறிந் திருக்க வேண்டும்.

முதலாவதாக மதக் கோட்பாடுகள் பெரும்பாலும் பெண்ணை ஆணுக்குக் கீழ்ப்பட்டவள் என்றும் ஆணுக்கு அடிமையானவள் என்றும் சித்தரிக்கின்றன. சிவன், பிரம்மா, விஸ்ணு, முருகன், யேசு, அல்லா, புத்தர் எனக் கூறப்படும் தெய்வங்கள், மதத்தலைவர்கள், மதப்போதகர்கள் அனைவருமே ஆண்கள். ஆண்கள் தலையெடுத்த சமூக அமைப்பில் முதன்மையான தெய்வத்தையும், ஆண்களாகவே படைக்க முடிந்தது. இதனால் பெண்களின் மனதிலும் நினைவிலும் கருத்தியல்ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் நாம் தரம் குறைந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்த முடிந்தது.

இன்றும் மக்களிடையே பெரும் ஆதிக்கத்தைப் பெற்றுள்ள புராண இதிகாசக் கதைகளும் பெண்களை ஆண்களின் அடிமைகளாகவே படைக்கின்றன. உதாரணமாக பஞ்சபாண்டவர்கள் திரௌபதியைத் தம் மனைவியாகக் கொண்டிருந்தனர். ஆனால் அவளுக்கு அவர்களில் ஒருவரை மட்டும் கணவனாக ஏற்றுக் கொள்ளும் உரிமை கிடையாது. குழந்தைப்பருவத்தில் ஆணும் பெண்ணும், சரிசமமாக வளர்கின்றனர், வளர்க்கப்படுகின்றனர். ஆனால் பெண்கள் பூப்பெய்துகின்றபோது உடல், உள ரீதியாக பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை வருவதனால் சமூகம் அவளின் செய்யற்பாடுகளை சுதந்திரத்தினை மட்டுப்படுத்துகின்றது.

இதன் ஒரு அங்கமாகவே அந்தக் காலத்தில் பெண் பூப்பெய்தினால் வீட்டை விட்டு சுதந்திரமாக நடமாட முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறாள். அதன் உச்சக்கட்டமாக மாதவிடாய்க் காலத்தின்போது அவள் வாழும் வீட்டில் இருந்துகூட தூரத் தள்ளிவைக்கப்படுகின்றாள். எதுவித பணியுமின்றி வீட்டின் ஒரு மூலையில் கைதிபோல் அடைக்கப்பட்டிருக்கிறாள். இதற்கு குற்றம், துடக்கு என்ற சாட்டுக்களும், இரத்தப் போக்கு இருப்பதனால் ஓய்வு தேவை என்ற காரணமும் காட்டப்படுகின்றது. ஆனால் இன்று பெண்கள் மாதவிடாயின்போது நாளாந்தம் செய்து கொண்டு வந்த சகல பணிகளையும் இடைநிறுத்தாது, செய்கின்ற நிலையினைக் காண்கிறோம். இது எப்படி சாத்தியமானது என்பதனை விஞ்ஞானரீதியாகப் பார்ப்போம்.

BCN Travals
Business Consulting Network.UG
நம்பிக்கையான விமானச் சேவை
உலகின் முன்னணி விமான நிறுவனங்களுடன் இணைந்து உத்தரவாதமான சேவையினை வழங்குகின்றோம்.இலங்கை இந்தியா கனடா அமெரிக்கா அவுஸ்ரேலியா சிங்கப்பூர் மலேசியா் உட்பட உலகின் அனைத்து நாடுகளுக்கும் சலுகைவிலையில் விமானச்சீட்டுக்களைப் பெற்றுத்தருகின்றோம். Rail&Fly எனும் விமானநிலையம் வரை புகையிரதத்தில் செல்வதற்கான சேவை வீட்டிலிருந்து விமான நிலையம் செல்வதற்கான வாகனசேவை என்பவற்றையும் வழங்குகின்றோம்.வங்கியில் பணம் செலுத்தினால் விமானப்பயணச்சீட்டினை உங்கள் வீட்டிற்கே அனுப்பிவைப்போம்.
இங்கே தொலைக்காட்சி பாற்பதற்கான புதியதொழில் நுட்பத்துடனான Receiver,LNB போன்ற பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
மின்னஞ்சல்:- bcntravals@gmail.com
BCN Travals
Adler str-30
44137Dortmund
Tel: 0231-10876361
இந்தியா செல்வதற்கான விசாவினையும் பெற்றுத் தருவோம்




## கனடா "தமிழர் தகவல்" சஞ்சிகையின் 22வது ஆண்டு மலர் வெளியீடும் விருது விழாவும்

கனடா 'தமிழர் தகவலி'ன் இருபத்து இரண்டாவது பூர்த்தி மலர் வெளியீடும், வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவமும் ரொறன்ரோ நகர மண்டபத்தில் 2013 பெப்ரவரி 10ம் திகதி நடைபெற்றது. மலர் வெளியீட்டு நிகழ்விற்கு சர்வதேசப் புகழ்பெற்ற மூத்த எழுத்தாளர் அ. முத்துலிங்கம் தலைமை தாங்கினார். லஷ்மி சிவனேஸ்வரலிங்கம், பிரதிஷினி மதீஸ்வரன் ஆகியோரின் தமிழ் வாழ்த்துடன் விழா தொடங்கியது. திரு. கதிர் துரைசிங்கத்தின் ஆரம்ப உரையைத் தொடர்ந்து இவ்விழாவில் பேராசிரியர் இ. பாலசுந்தரம் வாழ்த்துரை வழங்கஇ கவிஞர் பொன்னையா விவேகானந்தன் வெளியீட்டுரை நிகழ்த்தினார். முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்தின் சிற்றுரையை தொடர்ந்து ஆண்டு மலரின் முதற் பிரதியை திருமதி கனகேஸ்வரி நடராஜாவிடமிருந்து திருமதி ஜெனனி சிவலிங்கம் பெற்றுக் கொண்டார். முதல் அமர்வில் சிறப்புரையாக விருதாளர்கள் சார்பில் திரு. பி. விக்னேஸ்வரனின் உரை இடம்பெற்றது.

விருது வழங்கும் வைபவம் நீதன் சண்முகராஜாவின் தலைமையில் நடைபெற்றது. ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினர் தெரேசா ஆர்ம்ஸ்ரோங் பிரதம விருந்தினராக பங்குபற்றி விருதுகளை வழங்கினார். கலைத்துறைக்கான விருதுகள் பஞ்சாபிகேசன் நாகேந்திரன் (நாதஸ்வரம்), கமலாதேவி சண்முகலிங்கம் (சங்கீதம்) ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இலக்கிய எழுத்துப் பணிக்கான விருதை இரா. சம்பந்தன் பெற்றார். வணிகத்துறை முன்னோடிகள் விருது திருவாளர்கள் என். செல்வராஜா, எஸ்.கே. பாலேஸ்வரன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. மாணவர் விருதுகளை செல்விகள் ஐஸ்வரியா சந்திரபாலா (இசை-நடனத்துறை), ஹனுஜா கணேஷ் (விளையாட்டுத்துறை) ஆகியோர் பெற்றனர். சமய சமூகப் பொதுப்பணிகளுக்கான அதிசிறப்பு விருதை மருத்துவர் இ.இலம்போதரன் பெற்றுக் கொண்டார். இலங்கை வானொலி, ரூபவாஹினி தொலைக்காட்சி ஆகியவற்றில் கடமையாற்றி தற்போது கனடாவிலும் இதே துறையில் பங்காற்றிவரும் மூத்த மின்னியல் ஊடகவியலாளர் பி. விக்னேஸ்வரனுக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கப்பட்டது.

விருதாளர்களை பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன், சட்டத்தரணி யசோ சின்னத்துரை, குயின்ரஸ் துரைசிங்கம், அனோஜினி குமாரதாசன், அஜந்தி மதனாகரன் ஆகியோர் அறிமுகம் செய்து உரையாற்றினார்கள். செல்வி ஜானகி காந்தரூபனின் கனடிய தேசியக் கீதத்தோடு விழா நிறைவேறியது. விழாவின்போது எடுக்கப்பட்ட சில படங்களை இங்கு காணலாம். (தொகுப்பு: ராஜி)

## பலவீனமாகக் கருதப்பட்ட.....

7ம் பக்கத் தொடர்ச்சி

மாதவிடாய் மாதம் ஒரு முறை ஏற்படுகின்றபோது நான்கு அல்லது ஐந்து நாட்களிற்கு இரத்தப் போக்குக் காணப்படும். இது காயத்தின்போது ஏற்படுகின்ற குருதி இழப்புப் போல சடுதியாக ஏற்படுகின்ற குருதி இழப்பு அல்ல. ஓமோன்களின் செயற்பாட்டால் ஒரு மாதகாலமாகப் பருமன் தடித்து வழமைக்கு அதிகமாக குருதி விநியோகத்தைப் பெற்றிருந்த கருப்பை உட்சுவர் உடைந்து உதிர்வதனாலேயே இரத்தப் பெருக்கு ஏற்படுகின்றது. இதன்போது ஐந்து நாட்களுக்கும் சேர்த்து ஆகக் கூடுதலாக 300 மில்லிலீற்றர் இரத்தமே வெளியேறுகின்றது. எந்த ஒரு பெண்ணும் 18 வயதிற்கு மேல் 500 மில்லி லீற்றர் இரத்தத்தை உடலில் எதுவித பாதிப்பும் இன்றி இழக்கலாம் என்பது ஆதாரபூர்வமான உண்மையாகும். இந்த அடிப்படையில்தான் இரத்ததானம் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் வாறு இரத்ததானம் செய்யப்படுகின்றபோது, உடலில் பல நன்மைகள் ஏற்படுகின்றன. இவ விழப்பிற்கு ஈடாக, புதிய இரத்தம் இரு கிழமைகளில் உருவாகி விடுகின்றது. இதனால் இரத்தத்தில் புதிய அணுக்கள் சேருகின்றன. இதேபோல் பெண்களும், மாதாமாதம் இரத்தத்தை வெளியேற்றுகின்றபோது அவ் விரத்தம் இருகிழமைகளில் ஈடு செய்யப்பட்டுக் கொண்டே வருகின்றது. இதனால் உடல் புதுத்தெம்பு பெறுகின்றது. ஆகவே பெண்கள் மாதவிடாய் காலத்தின்போது ஓய்வெடுக்காமல் வேலை செய்யக்கூடிய உடல் உளபலம் உண்டு என்பதே உண்மையாகும்.

அடுத்ததாக மகப்பேற்றினை எடுத்துக் கொள்வோம். இங்கு பெண்ணானவள் ஒரு புதிய உயிரை பத்துமாதங்கள் தன்னகத்தே சுமந்து பிரசவ வேதனையைத் தாங்கி அவ்வுயிரை வெளிக் கொணர்ந்து உலகிற்குத் தருகின்றாள். பின் இக்குழந்தையின் வளர்ப்புக்காக சிறுகாலம் தன் கடமையில் இருந்து ஓய்வு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இக்காலத்தில்தான் ஆண் கடமையில் முன்சென்று உயருகின்றான். ஓர் உயிரைப் பிரசவிப்பது என்பது பெரிய கடமை. ஆண்களிற்குக் கிடைக்காத பெரும் பாக்கியம் பெண்களுக்குக் கிடைக்கின்றது என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை ஒரு பலவீனமாகப் பார்க்காது, பலமாகப் பார்க்க வேண்டும். மேலும் மாதவிடாய் நிற்றலையும் பெண்ணின் ஓர் பலவீனமான அறிகுறியாகப் பார்த்து வந்துள்ளனர். ஏனென்றால் மாதவிடாய் நிற்கின்றபோது ஓமோன்களின் சுரப்பு குறைவதனால் உடல் உள நோய்கள் ஏற்படுவதனால் அவர்கள் வேலை செய்வதற்குத் தகுதி இல்லாதவர்கள் என்று காரணம் காட்டி ஓய்வில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆனால் இன்றைய உலகில் இதனைப் பல பெண்கள் பொய்யாக்கி உள்ளனர். மேலும் மாதவிடாய் நிறுத்தத்தின் பின்பு பெண்களின் ஆற்றல் பல மடங்காக அதிகரித்து உள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மனிதவர்க்கவியல் நிபுணர்களான அற்றின்சீல்மான், நான்சீரானர் ஆகியோர் 1970இல் பழங்குடி மக்கள் மத்தியில் மேற்கொண்ட பல ஆய்வுத்தரவுகளின்படி அங்கு அவர்களின் நாளாந்த உணவில் 70 வீதமான உணவினைப் பெண்கள் சேகரித்து வருகின்ற தாவர உணவும், 30 வீதமானது ஆண்கள் வேட்டையாடி வரும் மாமிச உணவும் பூர்த்தி செய்கின்றன என்று தெரியவந்துள்ளது. ஆனால் ஆண்கள் வேட்டைக்காரர்களாகவும், பெண் குகையில் இருந்து ஆண்களுக்கு அடிமை வேலை செய்வதாகவும், ஆதி மனித வரலாறுகள் தெரிவிக்கின்றன. ஆனால் இதனை இன்றைய ஆய்வாளர்கள் நிராகரிக்கின்றனர். அவுஸ்திரேலியாவின் திவி இன பழங்குடி மக்களில் பெண்கள்தான் வேட்டைக்குச் செல்கின்றனர். அதேபோல் கொங்கோவில் அடர்ந்த காடுகளில் வசிக்கும் பழங்குடிமக்கள், தங்கள் வேட்டைப்பணியில் முழுக்குடும்பத்தினையும் ஈடுபடுத்துவதாக கிறிஸ்நைற் என்ற ஆய்வாளர் தெரிவிக்கின்றார். மேற்குலகச் சம்பிரதாயங்களின்படி வேட்டைக்குரிய தெய்வங்கள் யாவரும் பெண்களாகவே இருக்கின்றனர்.

இறுதியாக பெண்ணில் ஏற்படுகின்ற சில தவிர்க்க முடியாத உடற் தொழில் மாற்றங்களினால் அவள் கடமையில் பின்தங்கும்போது அதனைப் பலவீனமாகப் பார்க்கும் நிலைதான் அன்று இருந்துள்ளது. இன்று இதனைப் பலமாகப்பார்க்கும் காலம் தொடங்கிவிட்டது. இதற்குப் பெண்கள் அனைவரும் தம்மிடம் உள்ள பிற்போக்குச் சிந்தனைகளைக் களைந்து தம் ஆற்றல் திறனையும் முற்போக்குச் சிந்தனையையும் வளர்க்க வேண்டும். அத்துடன் அறிவியல்ரீதியாகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இவ் வாறு செயற்படும்போது பெண்கள் ஆண்களிற்குச் சரிசமனான பலமுள்ளவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. - நன்றி:மனஓசை

Nimal வீடியோ அன் போட்டோ
Professional Video Movie
Full HD 1080
கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள்
எதுவானாலும் மனதோடு நிற்க
நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...
சிறந்த முறையில் உங்கள் மங்கல விழாக்களை
வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க எம்மை
நாடுங்கள்
தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
Tel:01776794261

GAAYATREE PARTY SERVICE
உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு
உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும்
சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.
கொத்துரொட்டி
புரியாணி
நூடில்
தந்தூரிச்சிக்கன்
இறால் சம்பல்
இறால் கறி
இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு
இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும்
ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.

e.mail:gaayatree-cs@live.de
TeL:07021 99 39 363
Mobile:0152 119 74 068
73230 Kirchheim-Unter-Teck
Gaayatree Party Service






# பாலகனின் சிந்தனையைப் புரிந்துகொள்ள ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் முடியாது!

## இப்போதே என் வீட்டுக்காரி வெளிநாடு போவோம் என்கிறாள்

**நெடுந்தீவு முகிலன்**

அகப்பை காம்பால் மாவு கிளறி
அரிசிப் பேணியால் கொத்தி
ஓலைப்பெட்டியில் அவியும்
அம்மாவின் புட்டையும்
பழங்கறிச்சட்டியையும் நான்
பதம் பார்த்ததையும்...

அக்காளும் தங்கச்சியும்
மாத்துலைக்கை போட்டு
கை வலித்த போது விரல்களுக்கு
நான் நல்லெண்ணை தடவியதையும்...

ஒல்லித்தேங்காய்களை இணைத்து
வாய்க்காலுக்குள் நீந்தப்பழகியபோது
காற்சட்டை கழன்றதை பக்கத்துவீட்டு
பார்வதி பார்த்து சிரித்ததையையும்...

புத்து இடித்து கறையான் கொண்டுவந்து
அப்பா வளர்த்த கோழி குஞ்சுகளை
கீரியும் பிலாந்தும் சண்டை பிடித்து
திண்றதையும்...

வேப்பம் பூ வடகமும்
காத்தோட்டியம் காய் சீவலும் - அப்பா
அப்பாவுக்கு பிடிக்கும்
ஆடி அமாவாசை விரதத்தையும் ...

ஓடியல் கூழும் ஒற்றைப்பனை கள்ளும்
முற்றத்து கொய்யாவின் கீழ்
சுற்றி இருந்து பருகியதையும்...

பாட்டிகளின் ஒப்பாரி ஊரில் இருந்தே
யமனை ஓடஓட கலைப்பதையும் ...

“இப்போதும் நினைக்க இனிக்கிறதே”

இதில் ஒன்றையேனும் என்
மகன் அனுபவிப்பானா…

“இப்போதே என் வீட்டுக்காரி
வெளிநாடு போவோம் என்கிறாள்”

அம்மாவும், அக்காவும் எங்கே இருக் கிறார்கள் என்று விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனிடம் இலங்கை ராணுவம் விசாரித்ததாக சேனல் 4 தொலைக்காட்சி இயக்குனர் கெல்லம் மெக்ரே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரின்போது நடந்த படுகொலைகள் சம்பந்தப்பட்ட புகைப்பட டங்கள், வீடியோக்களை சேனல் 4 வெளியிட்டது. இந்நிலையில் அத்தொலைக்காட்சி அண்மையில் விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் இலங்கை ராணுவத்தால் கொல்லப்பட்ட புகைப்படங்களையும் வெளியிட்டது. இலங்கையில் நடந்த படுகொலைகள் தொடர்பான நோ பயர் ஜோன் வீடியோவை தயாரித்த சேனல் 4 தொலைக்காட்சி இயக்குனர் கெல்லம் மெக்ரே அளித்த பேட்டி வருமாறு,

கேள்வி: பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் புகைப்படங்களை எடுத்தது யார்?

பதில்: பாலச்சந்திரனின் புகைப்படங்கள் வீடியோவில் இருந்து எடுக்கப்பட்டவை. அந்த வீடியோ 19-5-2009 அன்று எடுக்கப்பட்டது. இலங்கை ராணுவ படைகளிலேயே 53ம் பிரிவு படை தான் மிகவும் கொடூரமானது, கொஞ்சமும் இரக்கமில்லாதது. அந்த படை தான் பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்களை எதிர்கொண்டது.இவை எல்லாம் அந்த வீடியோக களை எடுத்த 2 சிங்களப்படை வீரர்கள் கூறியது. அந்த 2 பேரும் 53ம் பிரிவு படையைச் சேர்ந்தவர்கள். போர் முடியும் வரை அங்கிருந்துவிட்டு அதன் பிறகு தப்பித்து வந்த வர்கள். அனைத்து வீடியோக் களையும் அவர்கள் தங்கள் செல்போனில் எடுத்தனர். போர் நடக்கும் இடத்தில் புகைப்படமோ, வீடியோவோ எடுக்க அனுமதி கிடையாது. இவை எல்லாம் ரகசியமாக எடுக்கப்பட்டவை. இறுதிக் கட்டப்போர் நடந்த முள்ளிவாய்க்கால் ஒரு கிலோ மீட்டர் சதுர பரப்பளவு கொண்ட சிறிய பகுதி. அங்கு தான் மக்களை கொன்று குவித்து போரை முடித்துள்ளனர். 18-5-2009ம் அன்று போர் தீவிரமடைந்தபோது அங்கிருந்த மரங்களும், வாகனங்களும் ராணு வத்தால் கொளுத்தப்பட்டன. அப்போது பாலச் சந்திரன் தனது மெய்க்காப்பாளர் 4 பேருடன் இரவு முழுவதும் பதுங்கு குழியில் இருந்துள்ளார். மறுநாள் காலை வேறு வழியின்றி மெய்க்காப்பாளர்களின் முடிவுப்படி பாலச்சந்திரன் 53ம் பிரிவு படையிடம் சரண் அடைந்தார்.

மே 19ம் தேதி காலை 7.30 மணிக்கு அவர் சரணடைந்தார். உடனே அவரை அவரது மெய்க்காப் பாளர்களிடம் இருந்து பிரித்துவிட்டனர். சரண் அடைந்தவர்களின் விவரத்தை அங்கு பணியில் இருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன கோத்தபயா ராஜபக்சேவுக்கு தெரிவித்துள்ளார். அவர் இதை கருணாவிடம் கூறியிருக்கிறார். அதற்கு கருணா, அந்த பையனை உயிரோடு விட்டால் நமக்கு தான் பிரச்சனை. அவன் மைனர் என்பதால் சட்டப்படி அவனை தண்டிக்க முடியாது. அவன் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துவிட்டால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அடுத்த தலைவராகக் கூட ஆகிவிடலாம். அதனால் பிறரைப் போன்று அவனை யும் கொன்றுவிடலாம் என்று கோத்தபயாவுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

இதையடுத்து 53ம் படைக்கு உத்தரவு கொடுக் கப்பட்டு அவர்கள் காலை 9.30 மணிக்கு பாலச்சந் திரன் அருகே துப்பாக்கியை வைத்து அவரை 5 முறை சுட்டனர். யாரைக் கொன்றாலும் அப்படை யினர் தடம் தெரியாமல் எரித்துவிடுவார்கள்.

அதனால் பாலச்சந்திரனையும் தூக்கிச் சென்றனர். பாலச்சந்திரன் சரண் அடைந்தபோதும், சுட்டுக் கொல்லப்பட்ட போதும் எடுக்கப்பட்ட வீடியோக்கள் தான் தற்போது வெளியிடப்பட்டன.

கேள்வி: பாலச்சந்திரனிடம் ஏதாவது விசாரணை நடத்தப்பட்டதா?

பதில்: பாலச்சந்திரனிடம் அவரது அம்மா மற்றும் அக்கா இருக்குமிடம் பற்றி கேட்டுள்ளனர். அதற்கு அவர், தப்பிக்கும்போது அவர்கள் ஒரு குழுவாகும், நாங்கள் ஒரு குழுவாகவும் சென்றபோது அம்மாவை காணவில்லை. அவர்கள் தற்போது எங்கு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை என்று கூறியுள்ளார். இது தவிர அவரிடம் வேறு எதுவும் கேட்கவில்லை. துப்பாக்கியை அவர் அருகில் கொண்டு வந்தபோது கூட தன்னைத் தான் சுட்டுக் கொல்லப் போகிறார்கள் என்று அவருக்கு புரியவில்லை. கேள்வி: உங்களின் வீடியோ பொய் என்று இலங்கை அரசு கூறியுள்ளதே?

பதில்: செல்போனில் இருந்த வீடியோவை நான் பலமுறை பார்த்து அதன் உண்மை தன்மையை அறிந்த பிறகே ஆவணப்படம் எடுத்தோம். அந்த வீடியோவை இங்கிலாந்தில் ஆய்வு செய்தோம். அதில் இருப்பது அனைத்தும் உண்மை, உண்மை, உண்மை. என்றார்.




யேர்மனியில் Manheim நகரில்
S.J. Enterprises
INDO AFRO TRAVELS
Mit uns um die Welt
மிகவும் மலிவாகவும் உங்கள் தேவையை
ஒரே இடத்தில் பூர்திசெய்து கொள்ளவும் நாடுங்கள்...
Fax:0621 86 24 32 14 e.mail info@indo-afro.de
Handy:0173 68 28 990
Tel:0621 86 24 32 12
S.1-11
68161 Mannheim

13.01.2013 முதல் எமது புதிய கிளை நிறுவனம் ஆரம்பம்!
S.J.Asian-Afro Store
பசுமையான மரக்கறிகள்- கடல் உணவுப் பொருட்கள்
மற்றும் வீட்டுக்குத்தேவையான
மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும்
மலிவாகவும் கிடைக்கும்.
தொடர்புகளுக்கு: ஸ்ரீதர்
Tel:0621 86 24 32 12/13
Handy:0173 68 28 990
S.J.Asian-Afro Store
Schulstraße7-9
67059 Ludwigshafen



# முட்டையோ! முட்டை!!

முட்டையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியவை!!!
முட்டை சைவமா இல்லை அசைவமா என்று கேட்டால், பலர் அதனை சைவம் என்று சொல்வார்கள். ஒன்று இன்று கடைகளில் உள்ள முட்டைகளுக்கு சேவலுடன் எந்தத்தொடர்பும் இல்லை. எனவே கருக்களில் உயிரணுக்கள் இல்லை. இந்த முட்டையில் இருந்து குஞ்சுகள் உருவாகாது. எனவே அது உயிர்கொல்லல் அல்ல. இது ஒரு புறமிருக்க முட்டைப் பிரியர்கள் நிறைய பேர் இந்த உலகில் உள்ளனர். சொல்லப் போனால், அசைவ உணவை விரும்பாத சைவ உணவு பிரியர்கள் கூட. முட்டையை விரும்பி சாப்பிட ஆரம்பித்துவிட்டனர். ஏனெனில் முட்டை அவ்வளவு சுவையாக இருப்பதோடு, அதில் அளவுக்கு அதிகமான அளவில் உடலுக்கு தேவையான சத்துக்கள் நிறைந்துள்ளன.

மேலும் முட்டையைப் பற்றி, ஒவ்வொருவரின் மனதிலும் ஒவ்வொரு விதமான கருத்துக்கள் உள்ளன. ஏனென்றால், முட்டையின் சரியான நன்மைகள் தெரியவில்லை என்பதனாலேயே தான். மேலும் முட்டையில் எவ்வளவு நன்மைகள் நிறைந்துள்ளதோ, அதே போன்று ஒருசில இதய நோயாளிகளுக்கு மிகுந்த ஆபத்தையும் ஏற்படுத்தும்.

எனவே இதய நோய் உள்ளவர்கள் முட்டையை சாப்பிடும் முன் யோசிக்க வேண்டும். யோசிப்பது என்ன தவிர்ப்பதே சிறந்தது. மேலும் குழந்தைகளுக்கு தினமும் 2 முட்டை கொடுப்பது, அவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும். சரி, இப்போது முட்டையைப் பற்றிய சரியான உண்மைகளைப் பற்றி பார்ப்போமா!!!

**புரோட்டீன்**

முட்டையில் 9 வகையான அமினோ ஆசிட்கள் உள்ளன. அத்தகைய ஆசிட்கள் தசைகளை நன்கு வலுவடையச் செய்வதோடு, பழுதடைந்துள்ள திசுக்களையும் சரிசெய்யும். மேலும் ஒவ்வொரு முட்டையிலும் 9 கிராம் புரோட்டீன் நிறைந்துள்ளது.

**எடை குறைவு**

முட்டையில் செறிவூட்டப்பெற்ற கொழுப்புகள் ஓரளவு உள்ளது. ஆனால் முட்டையில் உள்ள பெரும்பாலான கொழுப்புகள் செறிவூட்டப்படாதவை. அதுமட்டுமின்றி ஆய்வுகள் பலவற்றில் முட்டையை வேக வைத்து சாப்பிட்டால், உடல் எடை குறையும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

**பளிச் கண் பார்வைக்கு**

முட்டையை தினமும் சாப்பிட்டு வந்தால், கண் பார்வை கூர்மையாகும். அதுமட்டுமின்றி இது கண்புரை உண்டாவதையும் தடுக்கும்.

**குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு ஏற்றது**

முட்டையில் கோலைன் என்னும் பொருள் அதிகம் நிறைந்துள்ளது. இந்த பொருள் மூளை மற்றும் நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது. எனவே முட்டையை வளரும் குழந்தைகள் தினமும் சாப்பிட்டு வந்தால், புத்தி கூர்மையாகும்.

**பெண்களுக்கு சிறந்தது**

குறிப்பாக முட்டை பெண்களுக்கு மிகவும் நல்லது. ஏனென்றால், பால் பொருட்களில் கால்சியம் மட்டும் தான் இருக்கும். ஆனால் அந்த கால்சியம் உடலில் உறிஞ்சப்பட வேண்டுமெனில், வைட்டமின் டி வேண்டும். எனவே பெண்கள் பாலுடன், முட்டையை தினமும் சாப்பிட்டு வருவது நல்லது. மேலும் முட்டை மார்பக புற்றுநோயை தடுப்பதில் சிறந்தது.

**இதயத்திற்கு நல்லதா?**

ஹார்வார்டு பள்ளியில் நடத்திய பொது சுகாதார ஆராய்ச்சியில், முட்டையை அளவாக சாப்பிட்டு வந்தால், இதயம் ஆரோக்கியமாக இருக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, முட்டை சாப்பிட்டால், தமனிகளில் இரத்தம் உறைந்து அடைப்பு ஏற்படுவதையும் தடுக்கும்.

**சிறந்த அழகுப்பொருள்**

முட்டையில் சருமத்தை அழகாக்கவும், கூந்தலை பட்டுப் போன்று மாற்றவும் உதவும் சல்பர் நிறைய உள்ளது. உண்மையில் கூந்தலில் முட்டையை தடவி, ஊற வைத்து, பின் குளித்தால், கூந்தல் நிச்சயம் மென்மையாகவும், பட்டுப் போன்றும் இருக்கும்.

**வைட்டமின் டி**

உணவுப் பொருட்களில் வைட்டமின் டி சத்தை அதிகம் பார்க்கவே முடியாது. ஒரு சில உணவுப் பொருட்களில் மட்டுமே, இந்த சத்து இருக்கும். அதிலும் இதனை குழந்தைகள் அதிகம் சாப்பிட்டால், இதில் உள்ள வைட்டமின் டி, குழந்தைகளின் எலும்புகளுக்கு வலுவைத் தரும்.
வெள்ளை மற்றும் மஞ்சள் கருப்பகுதி

முட்டையின் வெள்ளைக் கரு மிகவும் ஆரோக்கியமான பகுதி. இதில் புரோட்டீன் மற்றும் இதர ஊட்டச்சத்துக்கள் உள்ளன. கொலஸ்ட்ரால் இல்லை. ஆனால் முட்டையின் மஞ்சள் கரு குழந்தைகளுக்கு மற்றும் கர்ப்பிணிகளுக்கு மிகவும் ஆரோக்கியமானவை

**சிறந்த காலை உணவு**

காலை உணவிலேயே சிறந்தது என்றால் அது முட்டை தான். ஏனெனில் இதன் செய்வது மிகவும் ஈஸியானது. மேலும் இதில் சரியான அளவில் கார்போஹைட்ரேட்களும், புரோட்டீன்களும் உள்ளன. எனவே இதனை காலை வேளையில் சாப்பிடுவது சிறந்ததாக இருக்கும்.
எப்படி சமைக்க வேண்டும்?

முட்டையின் ஆரோக்கியத்தை, அதனை சமைக்கும் விதத்தை வைத்து தான் சொல்ல முடியும். சொல்லப்போனால் முட்டையை வேக வைத்து சாப்பிடுவதே சிறந்த முறை. வேண்டுமெனில் இதனை அதிகமான அளவில் எண்ணெய் சேர்க்காமல், வறுத்து சாப்பிடலாம்.

**எப்போது முட்டை சாப்பிட கூடாது?**

ஏற்கனவே இதய நோய் இருப்பவர்கள் மற்றும் கொலஸ்ட்ரால் அதிகம் உள்ளவர்கள், முட்டை சாப்பிடக் கூடாது. ஏனெனில் முட்டையில் மஞ்சள் கருவில் அளவுக்கு அதிகமான அளவில் கொலஸ்ட்ரால் உள்ளது. இது இதய நோயாளிகளுக்கு மிகவும் ஆபத்தானது.


Nirubagini Magendiran
மொழிபெயர்ப்பாளர்
தமிழ்
யேர்மன்
யேர்மன்
தமிழ்
Tamil- Deutsch
Deutsch- TamilTel: 0176/ 24012135
Email:
nirumagendiran@hotmail.com
Vereidigte Dolmetscherin
und
ermächtigte Übersetzerin

அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை! இன்று அதே சுவையுடன் டோட்மூண்ட் நகரில் ஓர் நானா கடை அதுதான்
Sweet Chilli
www.sweetchilli-do.de
Original Srilankisches & Indisches Restaurant
50 Sitzplätze
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter
இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள்,அனைத்தும் ஒரே கூரையின் கீழ் .தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை
Tel: 0231 315 46 84
Rheinische str.60
44137 Dortmund
Herzlich Willkommen!
Buffet & Party Service





# அவுஸ்திரேலிய அபரிஜினல் ஆடப்படும் சிவா நடனம்!



உலகின் தொன்மையான தமிழினத்திற்கும், அவுஸ்திரேலிய அபரிஜினல் (Aboriginal) இனத் திற்குமிடையே பல ஒற்றுமைகள் இருக்கின்றன. அபரிஜினல் இனமக்களின் மொழி, கலாசாரம், பண்பாடு என்பவற்றுடன் உருவ அமைப்பும்கூட தமிழரோடு ஒப்புவமையாக உள்ளது. இந்தி யாவின் குமரிக்கண்டம் கடலில் மூழ்கியபோது அங்கிருந்த தமிழினமக்கள் கிழக்கே அவுஸ் திரேலியாவிற்கும், மேற்கே ஆப்பிரிக்காவிற்கும் பரவினார்கள் என்பது செய்தி.

அவுஸ்திரேலியாவில் இப்போதும் கூட களரி ஆட்டம் எனப்படும் நடனம் உள்ளது. பழங் குடிகள் பலவகையான நடனங்களை ஆடுகின் றார்கள்.

நெற்றியிலே ஒரு கண்ணை வரைந்து கொண்டு, இவர்கள் ஆடும் அந்த ஆட்டத்திற்கு “சிவா நடனம்“ (Shiva Dance) என்று பெயர்.
உடல் எங்கும் மூன்று கோடுகளாக வெள்ளை வர்ணத்தைப் பூசிக்கொள்கின்றார்கள்.

நெற்றியிலே மாத்திரம் கிடையாகப் பூசிக் கொள்கின்றனர். Spencer, Killan என்பவர்கள் எழுதியுள்ள The Native Tribes of Central Australia (Dover Publications, Inc., New York, 1968) என்ற புத்தகத்தில் இதற்கான புகைப் படங்கள் ஆதாரமாக (படங்கள் 128, 129 ∴ பக்கங்கள் 621, 622) உள்ளன.

## அடிமை சங்கிலியை தகத்தெறிந்து..!

சுபோதினி. சுபோ. பிரான்ஸ்

அழிப்பிற்கிடையே மிஞ்சும் சொற்களில்
ஒளிர்கிறது பெண்ணின் வரலாறு.
அடுப்புச் சாம்பலுக்குள் ஒளித்த
அவர்களின் உணர்வுகள்..
இன்று கொளுந்து விட்டு
எரிந்து கொண்டிருக்கின்றது..!
அடக்கு முறைகளை உடைத்தெறிந்து.
அடிமை சங்கிலியை தகத்தெறிந்து..!
அறிவியல் உலகில் பல சாதனைகள் படைத்திடுவாள்.!
சரித்திரம் படைத்திடும் புயலாய் ..!
அறியாமைகளை களைந்திடும் ஜோதியாய்.!
அடங்கா வேகத்துடன் அண்டமே உன்னை கான
துணிவுடன் எழுந்து வா...!!!
பெண்கள் வெறும் போக பொருள்ளல்ல..!
வரலாற்று நாயகிகளாகவும் சமூகத்தை
தாங்கும் சாதனை தூண்களாகவும் மாறிவிட்டனர்..!
வீர மங்கையர் எம்மை இழிவு படுத்தும்
மூடர் தம்மை கொளுத்தி ஆழுவோம்..!



ஓவியம்: கிருஷ்ணா

## என் மனைவி வீட்டில் சும்மாதான் இருக்கிறாள்!




Oh she?!?...
doesn't work she's a housewife.

ஸ்ரீ வீராட் விஸ்வ குலபிரமனே நமக!
வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை

E.S.T.M Jewellery & Schmuck

நவீன உயர்தர டிசைன்களில் நகைகள், திருமண ஆபரணங்கள், ஓடர் நகைகள், திருத்த வேலைகள், யாவும் செய்து கொடுக்கப்படும். தாலிக்குப் பொன்னுருக்குதல், காது மூக்குக்குத்துதல் போன்ற நல்ல காரியங்களும் செய்து கொடுக்கப்படும். பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்.

Rheinische Str.73
44137 Dortmund

உரிமையாளர்:
சின்னத்துரை தயாகரன்
Handy:01633642642



HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
ஆங்கிலம், யோ்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்து கற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



# விழிப்புலனற்ற மாணவன் மரதன் ஓடி சாதனை

விழிப்புலனற்ற மாணவன் மரதன் ஓடி சாதனை ... பார்வையை இழந்த இந்த மாணவன், சுன்னாகம் வாழ்வகத்தில் கல்விகற்று வருகிறார்......... தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில், விழிப்புலனற்ற மாணவன் ஒருவர் 8 கிலோ மீற்றர் தூரத்தை ஓடி சாதனை படைத்துள்ளார். இந்தப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் உயர்தரம் கற்றுவரும் விஜயகுமார் விஜயலாதன் என்ற மாணவனே இந்தச் சாதனையைப் படைத்துள்ளார். சனிக்கிழமை, 09 பெப்ரவரி 2013 காலை 6 மணிக்கு சுன்னாகம் மருதனார்மடத்தில் இருந்து தெல்லிப்பழை வரையான 8 கிலோ மீற்றர் தூரத்தை இவர் எந்தவித தடையும் இன்றி தனது கண்களை கறுப்பு துணியால் கட்டியவாறு ஓடி முடித்துள்ளார். 2009ஆம் ஆண்டு வன்னியில் நடைபெற்ற யுத்தத்தினால் தனது பார்வையை இழந்த இந்த மாணவன், சுன்னாகம் வாழ்வகத்தில் கல்விகற்று வருகிறார். இவர் அந்தப்போட்டியில் பெருவிருப்போடு பங்குபெற்றி ஏனைய மாணவர்களுக்கு தான் சளைத்தவன் இல்லை என்ற வகையில் இவர் தனது சாதனை நிலைநாட்டியுள்ளார்...

சரஸ்வதி கல்யாணமாலை
இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டனும் சாதகக் குறிப்புகளுடனம் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள்.
தொடர்புகளுக்கு: செல்வி:
0173 27 50 457- Tel: 02333 86 93 159
02333 86 93 165

# பார்வையற்ற மாணவன் படைத்த மிகப்பெரும் சாதனை!



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

சாதனைக்கு ஊனம் ஒரு தடையில்லையென தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் உயர்தரம் பயின்ற மாணவன் நிருபித்துள்ளார்.

இரு கண்களும் பார்வை இழந்த சொர்ணலிங்கம் தர்மதன் உயர்தர கலைப்பிரிவில்
தமிழ்,,, இந்துநாகரீகம், அரசியல் ஆகிய மூன்று பாடங்களிலும் சிறப்பு சித்தியான 3A
எடுத்து சாதனை படைத்துள்ளார்.மாவட்ட மட்டத்தில் நான்காம் இடத்தையும் தேசிய ரீதியில் ஐம்பத்துநான்காவது,, இடத்தையும் பிடித்துள்ளார்.

தனது இரு கண்களில் பார்வையை இழந்த நிலையிலும் கற்க வேண்டும் என்ற ஆர்வமும் விடாமுயற்சியுமே இந்த வெற்றிக்கு காரணம்.

எனது 9 வயதில் இரு கண் பார்வையையும் முற்றாக இழந்து விட்டேன். ஆனால் நம்பிக்கையை நான் இழக்கவில்லை. வாழ்வகத்தின் உதவியுடன் தெல்லிப்பழை யூனியன்,, கல்லூரியில் கண் பார்வையுள்ள சாதாரண மாணவர்களுடனேயே கற்றேன்.

எனது விடாமுயற்சிக்கு ஆசிரியர்களும், நண்பர்களும் உறுதுணையாக இருந்தார்கள்., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன் என சொர்ணலிங்கம் தர்மதன்,, தெரிவித்துள்ளார்.

இவர் காங்கேசன் துறை சந்தை வீதியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது, கோண்டாவில் மேற்கில் வசித்து வருகின்றார். இவரின் தந்தையான சொர்ணலிங்கம், என்பவர் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery
தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel : 0711/ 61 58 976 Fax: 0711-61 42 663
Ludwig str. 92
70197 Stuttgart
Handy :01703344059

எங்கள் நிறுவனத்தின் 18 வது ஆண்டு நிறைவில் உங்கள் ஆதரவுக்கு நன்றி சொல்லி மகிழ்கின்றோம்!
Travel AIR
www.travelair.de
email:info@travelair.de
Tel: 0202/4936921 , Fax: 0202/2443106
Tel: 0202/24431 04 - 05
Luisen Str.46 , 42103 Wuppertal

RAJE druck
ராஜி பதிப்பகம்
Spezialdruckerei Fernöstlicher Medien
Inh.: Kandiah Ampalavanapillai e.K
சகல விதமான அச்சுப்பதிப்பு வேலைகளும் தரமானதாகக் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
Neu Straße 53, 58256 Ennepetal. Tel.: 0 23 33 / 60 27 96
Fax: 0 23 33 / 98 41 61 Mobil: 0 172 956 76 46 Pvt. Tel.: 0 23 33 / 62 32 8
info@rajedruck.de www.rajedruck.de

Bielefeld நகரில்....
Sahanan Video
Video& Foto
உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளையும் மிகத் துல்லியமாகவும் அழகாகவும் படம்பிடித்து தருகின்றோம்.
K.Ravi
Tel:0521 42 86 528
Möbil:0177-191 21 28
e-mail:sahananvideo@hotmail.de
Full HD& Blu-ray

தினசரி மாலை 6.00 மணிக்குப் பூஜை உண்டு
துர்க்கா பூஜா துரந்தரர் சிவசாமிக்குருக்கள் ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
Robert koch Str.5
58239 Schwerte
Tel: 02304/ 16721



# அப்பா - மகள் உறவை
## அசிங்கப்படுத்யிட்டார்கள்! குஷ்பு கவலை
## ஒரு பரபரப்புக்காக இன்று எதுவும் எழுதலாம்!

இன்னொரு மணியம்மை என்று கட்டுரை வெளியான குமுதம் "ரிப்போர்ட்டரை" கொளுத்தினர் திமுகவினர். இந்த பரபரப்பு மத்தியில் எதைப்பற்றியும் கவலைப் படாமல் மானாட மயிலாட படப்பிடிப்பு, நாடகங்கள், என் ஓய்வின்றி சுறுசுறுப்பாகவே இருக்கிறார் குஷ்பு.

திமுக தலைவர் கருணாநிதிக்கும் தனக்கும் இடையேயான உறவு அப்பா மகள் உறவைப் போன்றது அதை அசிங்கப்படுத்தும் வகையில் ஊடகங்களில் செய்தி வெளியிடுகின்றனர் என்று இந்திய ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் நடிகை குஷ்பு கூறியுள்ளார். வெள்ளிக்கிழமை வந்தாலே இன்றைக்கு ஏதாவது சர்ச்சை வந்துவிடுமோ என்று குஷ்பு எதிர்பார்க்க தொடங்கி விடுகிறார். கடந்த இரண்டு வாரங்களாகவே குஷ்புவை மையம் கொண்டு வார இதழ்களில் வெளியான செய்திகளும் இதற்கு கிடைக்கும் ரியாக்சன்களும்தான் ஊடகங்களில் பரபரப்பாக வெளியாகி வருகின்றன. விகடன் இதழில் திமுகவின் அடுத்த தலைவர் குறித்து குஷ்பு அளித்த பேட்டிக்கு ஸ்டாலின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டார் குஷ்பு.




வீடுகளில் கல்லெறியப்பட்டது. குஷ்புவைத் தாக்கிய வர்களின் செயலை காட்டுமிராண்டித் தனம் என கடுமையாக கண்டித்தார் கலைஞர். தி.மு.க.வில் இந்த பரபரப்புகள் ஓய்ந்து கொண்டி ருந்த நிலையில், கலைஞரையும் குஷ்புவையும் இணைத்து, குமுதம் ரிப்போர்ட்டர் இதழில் கடந்த வாரம் செய்தி வெளியாகவே பற்றிக் கொண்டது

ஆனால், கருணாநிதியுடன் இணைத்து எழுதப்பட்ட செய்தி பற்றி மனம் நொந்து பதிலளித்துள்ள குஷ்பு ஊடகங்களுக்கு ஒரு நேர்மை இருக்க வேண்டும் என நினைப்பவள் நான். எழுத்து சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக எதையும் எழுதலாம் என்பது கீழ்த்தரமான, நாலாந்தர சிந்தனை என்றார். தனிமனித தாக்குதல், கேரக்டரைஸேஷன் அட்டாக் என்பது பத்திரிகை தர்மங்களை குழி தோண்டிப் புதைத்து விட்டதற்கு சமம். அந்த பத்திரிகைக்கு சமூகப் பொறுப்பு இருக்கிறதா என்பதே எனக்கு சந்தேகமாக இருக்கிறது. தலைவர் கலைஞருக்கும் எனக்கு மான உறவு அப்பா-மகள் போன்றது. அந்த புனிதமான உறவையே இவர்கள் இவ்வளவு கேவலமாக சித்தரித்து செய்தி வெளியிட்டுள்ளனர் என்று கூறியுள்ளார்.

### மணியம்மையார் யார்?

தந்தை பெரியார் முதுமை காலத்தில் அவருக்கு நம்பிக்கைக்குரிய உதவியாளர் ஒருவர் தேவைப் பட்டார். இதனால் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த வேலூர் கனகசபை தமது மகளான அரசியல் மணியை பெரியாரிடம் உதவியாளராக சேர்த்தார். அவரே மணியம்மையார் என அழைக்கப்பட்டார். பின்னர் மணியம்மையை பெரியார் திருமணம் செய்து கொண்டார்.



பெரியார்- மணியம்மை

பெரியார்- மணியம்மை திருமணத்தை ஆதரிக்காத பேரறிஞர் அண்ணா, நெடுஞ்செழியன் உள்ளிட் டோர் திராவிடர் கழகத்தில் இருந்து வெளியேறி 'திராவிட முன்னேற்றக் கழகத்தை" 1949-ம் ஆண்டு தொடங்கினர். திமுக தொடங்கும்போது பல மூத்த திமுக தலைவர்களில் ஒருவராக கருணாநிதியும் இருந்தார். பெரியார் மறைவுக்குப் பிறகு மணியம் மையாரே திராவிடர் கழகத்தின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். அப்போதும் திராவிடர் கழகத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

அண்மையில் திமுகவின் அடுத்த தலைவராக ஸ்டாலின்தான் இல்லை என்று குஷ்பு கருத்து தெரிவித்து கல்லடி வாங்க நேரிட்டது. திருச்சியில் அப்போதே குஷ்புவிடம் 'கோபாலபுரம் வீட்டுக்கு வரக் கூடாது என்று உங்களை சொல்லியிருக் கிறார்களாமே?" என்று ஒரு செய்தியாளர் கேள்வி எழுப்ப, உங்க இஷ்டத்துக்கு கேட்கிறதுக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாது என்று குஷ்புவே கூறியிருந்தார்.

ஸ்டாலினை குஷ்பு ஏன் எதிர்க்கிறார்? அவரை ஏன் கருணாநிதியின் வீடு இருக்கும் கோபாலபுரத்துக்கு வரக் கூடாது என்பதன் அடிப்படையில் இந்த அட்டைப் படக் கட்டுரையை குமுதம் ரிப்போர்ட்டர் "இன்னொரு மணியம்மை?" என்று கேள்விக் குறியோடு வெளியிட்டிருக்கிறது.



பெரியார் பற்றிய திரைப்படத்தில் மணியம்மையார் வேடத்தில் நடித்தவர் குஷ்பு என்பதும் குறிப்பிடத் தக்கது.

**செல்வம் அழியும், கல்வி அழியாது...!**

அதோ போகிறவர் கோடீஸ்வரராக இருந்து பின் லட்சாதிபதியாக மாறி பின் அதையும் இழந்து இப்போ ஒன்றும் இல்லாதவர் ஆகிவிட்டார் என்ற நிலை உருவாகலாம்...ஆனால் அதோ போகிறவர் M A கல்வி பயின்று, பின்னர் BA வாக மாறி, கடைசியில் SSLC யும் இழந்து 2 வகுப்போடு செல்கிறார் என்று சொல்ல முடியாது...





யேர்மனியில் பிராங்பேட் நகரில்...

Jaffna Basar

ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்க குறைந்த விலையில்
விமான பயணச்சீட்டுக்கள் மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும்

Jaffna Basar Jewellery
Kaiserstr.64 (Laden Nr.22)
60329 Frankfurt am Main
உரிமையாளர் நடராஜா சுதன்

Tel: 069 25 62 63 53

யேர்மனியில் முல்கைம் நகரில்...

Jaffna Basar

இல்லத்திற்கு வேண்டிய மளிகைப் பொருட்கள்
கடல் உணவு வகைகள்
பசுமையான மரக்கறிகள்.

தொலைபேசி அட்டைகள்
சிம் காட்டுக்கள்

அனைத்திற்கும் நாடுங்கள்

Jaffna Basar
Kaiserstr.39
45468 Mülheim
Germany

Tel:02086 96 64 85
Tel:01787633084





# தலைவா படத்துக்கும் அரசியலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

தலைவா என்ற பெயரும், விஜய் ஜனத்திரளைப் பார்த்த கை அசைக்கும் போஸ்டரும் தலைவா அரசியல் படம் என்ற தோற்றத்தை தருகிறது. விஜய்யின் அரசியல் பிரவேசத்துக்கு இந்தப் படம் அச்சாரமாக அமையுமா?

திரையுலகிலும், வெளியேயும் இந்தக் கேள்வி சுழன்றடிக்கிறது.

இதற்கு விஜய்யே விளக்கம் தந்துள்ளார். அவர் கூறுகையில், "தலைவா என்ற தலைப்பு அரசியலாகத் தெரிந்தாலும், படத்தில் அரசியல் தொடர்பான எந்தக் காட்சிகளும் இடம்பெறவில்லை.
இந்தக் கதையை துப்பாக்கி படப்பிடிப்பின்போது எனக்கு இயக்குநர் விஜய் சொன்னார். கேட்டபோதே பிடித்துவிட்டது. இதுதான் எனது அடுத்த படம் என்பதில் உறுதியாக இருந்தேன். ஆனால் தலைவா அரசியல் படம் அல்ல. அரசியல் சம்பந்தமான காட்சிகள் எதுவும் இல்லை. ஆனால் படம் பார்க்கும்போதுதான் தலைவா என்ற தலைப்பு வைத்ததன் நோக்கம் தெரியவரும். இதற்கு முந்தைய படமான துப்பாக்கி ரூ. 180 கோடி வசூலித் துள்ளது. இதற்காக படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தியேட்டர்களுக்கு அதிக இளைஞர்கள் வருகை, பெரிய வியாபாரம், தியேட்டர்கள் போன்ற பல காரணங்களால் இது சாத்தியமாகி உள்ளது என நினைக் கிறேன். என்றார் விஜய். தலைவா படத்தில் மைனா படத்தில் கிராமத்து பெண்ணாகவந்து மனங்களில் எல்லாம் கூவிய அந்த அமலா பால் விஜய்க்கு ஜோடியாக நடிக்கின்றார்.

மைனாவில் வந்த அமலா பால் வேறு! என்று சொல்லுமளவிற்கு கவர்ச்சியாக வருகின்றார். காதலில் அல்ல, அரசியலில் சொதப்புவது எப்படி என்று சொல்லிக் கொடுக்கப்போகிறாரா? பார்க்கலாம்.



# காத்திருப்பேன் உனக்காக!

சூர்யாவின் தேதிக்காக மோதும் கவுதம் மேனன் - லிங்குசாமி!
சிங்கம் 2 முடிந்த பிறகு சூர்யாவின் தேதி யாருக்கு..? இந்த கேள்வியோடு சூர்யாவைத் துரத்த ஆரம்பித்துள்ளனர் இயக்கு நர்கள் கவுதம் மேனனும் லிங்குசாமியும்.

மாற்றானுக்குப் பிறகு சூர்யா நடித்துவரும் படம் சிங்கம் 2. ஹரி இயக்கும் இந்தப் படம் முடிவடையும் தறுவாயில் உள்ளது.

அடுத்து இரு படங்களில் நடிக்க சம்மதித்துள்ளார் சூர்யா. இதில் ஒரு படத்தை கவுதம் மேனன் இயக்குகிறார். படத்துக்கு தலைப்பு துப்பறியும் ஆனந்தன்.

இன்னொருவர் இயக்குநர் லிங்குசாமி. இந்தப் படத்தில் சூர்யா ஜோடியாக (நீதானே என் பொன்வசந்தம்) சமந்தாவை ஒப்பந்தம் செய்துவிட்டு கதையோடு காத்திருக்கிறார் லிங்குசாமி.

இருவருமே சூர்யா ஆம் என்றதும் படப்பிடிப்புக்குச் செல்லக் காத்திருக்கிறார்கள். எனவே யாருக்கு முதலிடம் தருவது என்பதில் சூர்யாவுக்கே பெரும் குழப்பமாக உள்ளதாம்.
இந்தக் குழப்பத்தைத் தவிர்க்க, இரண்டு படங்களுக்கும் சமமாக தேதிகள் ஒதுக்கி ஒரே நேரத்தில் நடிக்க முடிவு செய்துள்ளாராம் சூர்யா. இரண்டு கதைகளுமே நிச்சய வெற்றி என்ற நம்பிக்கை சூர்யாவுக்கு இருப்பதால், ஒப்புக்கொண்டுள்ளார்.


# Milin Impex

Asiatische Lebensmittel Groß und Einzelhandel

யேர்மனியில் தலைமுறை, தலைமுறையாக தரமான ஆசிய, ஆபிரிக்க உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்களும், மொத்த, சில்லறை விநியோகஸ்தர்களும்.

யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான தரமான இலங்கை,இந்திய,மற்றும் ஆபிரிக்கா உணவுப் பொருட்களைச் சிரமமின்றி ஒரே இடத்தில் மலிவாகவும், மொத்தமாகவும்,சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஒரு 22 வருட அனுபவமிக்க நிறுவனம்.

Tel:0231 45 96 17 / 28



ஒவ்வொரு திங்களும் உடன் மீன்கள் எம்மிடம் கிடைக்கும்
FRISCH FISCH



சில்லறை வாடிக்கையாளர்களுக்கு ஓர் இனிய செய்தி!

எமது நிறுவனத்தின் 22 வது ஆண்டு நிறைவான 01.01.2013 இல் இருந்து சில்லறை வாடிக்கையாளர்களும், மொத்தவிற்பனை விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்து கொள்ளலாம். (100 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டும்)
மலிவு விற்பனை விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். Web :www.milinimpex.de

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen

Dortmund நகரில்
Westendorf Str.41
44287 Dortmund
Tel: 0231 45 96 17 /28
Fax: 0231 18 15 288

Wuppertal நகரில்
Aue-96
42103 Wuppertal
Tel: 0202 2999 58 69

Lüdenscheid நகரில்
Höch Str.8a
58511 Lüdenscheid
Tel:02351 9742131

Milin Impex

Mail:info@milinimpex.de

# திரை உலகம்

## கங்னம் + பிரபுதேவா



கங்னம் புகழ் தென்கொரிய கலைஞர் பிஎஸ்ஒய் பிரபு தேவாவின் தாளத்திற்கு ஆடவிருக்கிறார்.

கங்னம் ஸ்டைல் பாடல் மூலம் உலகப் புகழ் பெற்ற தென்கொரிய கலைஞர் பிஎஸ்ஒய் பிரபு தேவாவின் தாளத்திற்கு ஆடவிருக்கிறார்.

பிரபுதேவா நடித்த 3டி டான்ஸ் படம் ஏபிசிடி. இந்தியில் எடுக்கப்பட்ட இப்படம் தமிழிலும் வெளியானது.

நடனத்தை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட இப்படத்தில் பிரபு தேவாவின் நடனத் திறமை பாராட்டப்பட்டது.

இந்நிலையில் இப்படத்தின் உரிமையை வாங்க தென் கொரிய சினிமா தயாரிப்பு நிறுவனம் ஒன்று யுடிவி மோஷன் பிக்சர்ஸுடன் பேசி வருகிறது.

கொரிய மொழியில் பிரபுதேவாவின் கதாபாத்திரத்தில் கங்னம் ஸ்டைல் புகழ் பிஎஸ்ஒய் நடிப்பாராம்.

இது குறித்து யுடிவி தலைவர் சித்தார்த் ராய் கபூர் கூறுகையில், ஏபிசிடியின் உரிமையை வாங்க தென்கொரிய தயாரிப்பு நிறுவனம் ஒன்று எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இப்போதைக்கு இது குறித்து எதுவும் கூற முடியாது. இப்படத்தின் உரிமையைக் கேட்டு பலர் எங்களை அணுகுகின்றனர். படம் வெற்றி பெற்றதில் மகிழ்ச்சி என்றார்.

## தனுஷ் எனக்கு மிகச் சிறந்த நண்பர்.



நடிகை ஹன்ஸிகா



தனுஷ் படத்தில் நான் நடிக்க மறுத்துவிட்டதாக வந்த செய்திகளில் உண்மையில்லை. அவர் எப்போதும் என் நெருக்கமான நண்பர், என்று நடிகை ஹன்ஸிகா கூறியுள்ளார். தனுஷ் இப்போது மரியான் என்ற தமிழ்ப் படத்தையும், ராஞ்ஜனா என்ற இந்திப் படத்திலும் நடித்து முடித்துவிட்டார்.அடுத்து சற்குணம் இயக்கத்தில் நய்யாண்டி படத்தில் நடிக்கிறார். இதில் அவருக்கு ஜோடியாக நஸ்ரியா நஸீம் என்ற மலையாள நாயகி நடிக்கிறார். இந்தப் படத்தில் நடிக்க முதலில் ஹன்ஸிகா மற்றும் அமலா பாலிடம் கேட்டதாகவும் அவர் மறுத்துவிட்டதாகவும் செய்தி வெளியானது.இதுகுறித்து ஹன்ஸிகா வெளியிட்டுள்ள விளக்கத்தில், "தனுஷ் எனக்கு மிகச் சிறந்த நண்பர். அவருடன் நான் மாப்பிள்ளை படத்தில் நடித்திருக்கிறேன். நய்யாண்டி படத்தில் நடிக்க என்னைக் கேட்டது உண்மைதான். நானும் நடிக்க சம்மதித்தேன். ஆனால் தேதிகள் ஒத்துவரவில்லை. எனவே அவர்கள் வேறு நடிகையை தேடிக் கொண்டனர். மற்றபடி, தனுஷ் கேட்டு நான் மறுப்பேனா...," என்று கூறியுள்ளார்.

## பிராணிகளுக்கு பதிலாக பாலியில் குற்றவாளிகளைப் பயன்படுத்தலாம்!



திரிஷா

பரிசோதனைக் கூடங்களில் முயல், எலி போன்ற அப்பாவி விலங்குகளை பயன்படுத்துவதை விட பாலியல் குற்றவாளிகளை பரிசோதனைக்கு உட்படுத்தலாம் என்று திரிஷா சிபாரிசு செய்துள்ளார்.

நாடு முழுவதும் புதிய மருந்து கண்டுபிடிப்புக்கான லேப்களில் நிறைய முயல், எலி போன்றவைகளை அடைத்து வைத்து அவற்றுக்கு மருந்தை செலுத்தி பரிசோதனை நடத்துகிறார்கள். இந்த முறையை தடை செய்ய வேண்டும் என்று திரிஷா கண்டித்துள்ளார்.

இதுகுறித்து அவர் டுவிட்டரில் ,"நான் பிராணிகள் பாதுகாப்பு அமைப்பில் இருக்கிறேன். பரிசோதனை கூடங்களில் பிராணிகள் பயன்படுத்துவதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இதற்கு தடை விதிக்கப்பட வேண்டும்.

ஜெயிலில் நிறைய குற்றவாளிகள் உள்ளனர். குழந்தைகளை பாலியல் பலாத்காரம் செய்தவர்களும் சிறையில் இருக்கிறார்கள். பரிசோதனைக் கூடங்களில் அப்பாவி விலங்குகளுக்கு பதிலாக இந்த குற்றவாளிகளை பரிசோதனைக்கு பயன்படுத்தி தண்டிக்கலாம். "இவ்வாறு திரிஷா கூறினார்.

நடிகை திரிஷா பிராணிகள் பாதுகாப்பு அமைப்புக்கு உதவியாக இருக்கிறார். தெரிவில் திரியும் நாய்களை பிடித்து வளர்த்து தத்து கொடுக்கவும் செய்கிறார். தற்போது பரிசோதனைக் கூடங்களில் எலி, முயலை பயன்படுத்துவதற்கும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


















Dortmund நகரில் 14.09.2013 வெற்றிமணி விழா